1140 Registered No. M. 2095.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
25 NOV 1926
MADRAS

# ஞானோதயம்.

பிரம்மஞானம், மதம், சாஸ்திரம், கலை, நாகரீகம், முதலிய
உயர்நல விஷயங்களைப் பரவச்செய்யும் ஓர்
மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

பத்திராதிபர்—V. இராமச்சந்திர நாயுடு, கனகுடி.
தஞ்சாவூர் ஜில்லா.

தொகுதி 17 | 1926-ஆம் நவம்பர்-மீ 11உ | பகுதி 5.

பொருளடக்கம்.

1. டாக்டர் அன்னிபெஸண்டு அம்மையாரின் 80ம் வருஷப்பிறப்பு
—K. S. இராமஸ்வாமி அய்யர் ... 103
2. உன்னை நீ அறி
—(மொழிபெயர்ப்பு) V. இராமச்சந்திர நாயுடு ... 104
3. ஸ்தூல சரீரம்
—(மொழிபெயர்ப்பு) V. இராமச்சந்திர நாயுடு ... 112
4. திவ்விய ஞானஸாரம்:—A. இராமஸ்வாமி சாஸ்திரிகள் ... 114
5. உதய நக்ஷத்திர மகா சங்கம்
—(மொழிபெயர்ப்பு) P. R. ஸாரங்கராஜையர் ... 120
6. சகல மதங்களும் ஒன்றாய்க் கலந்து செய்யும் பூஜாக்கிரமம் 127
7. குறிப்புகளும் சமாசாரங்களும் ...129

சந்தா விபரம்:—
உள்நாடு ரூ 1—0—0, வெளிநாடு ரூ 1—8—0,
தனிப்பிரதி ரூ 0—2—0.

ராம் ஸ்ரீ இராமச்சந்திரா அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

# ஜகத்குரு ஸ்தோத்ரம்.

(நக்ஷத்திர தூதர்களுக்காக)

எண்கலைவண்ணம்

திருப்புகழ் சந்தம்-ஆதிதாளம்

தனத் தனத் தன தனதானதன ... தனதான

நிலத்தடத்துறு பலசாபார்கவி
மதத்துயிர்தரு மறையோனேஎம
தகத்தடத்திருள் களைவாயே ஆதி ... லுறைவாயே.

நிலைத்தமெய்ப்புக ழருளாளாமதி
கலக்குமிப்பல விதவேதாகமர்
பலர்க்குமப்பொருள் பகர்வோனேசமர் ... களைவோனே

புலத்தெரிர்ப்படு மறிவாலேயொரு
பொருட்டுணிந்துறை புவிசாராதுனை
மனத்தகத்திட வருவாயே அருட் ... புரிவாயே

புடைத்தெழுந்திரைக் கடலாடைகொளு
நிலத்தொடுஞ்சுரர் முதலானோர்பணி
குணத்தமர்பெருங் குருவானையருட் ... பெருமானும்

நலத்துறும்படியர் குணமாருதிமம்
நிகர்த்ததெள்ளிய மனதாலேநிதம்
மிகுத்தவன்பொடு மறவாமேயுனை ... யுறுவோமே

நகைத்துமெல்லென சிறுவாயாலசை
மலர்க்கரத்தொடு மகிழ்வாலேவரு
மகற்கிடர்த்தர நினையாமேதின

மலைத்தலைப்புறு மதிபோலேஇகழ்
மனத்தகத்துறு பெரியோனேபுகழ்
குணத்திறுத்துக வெண்மைநீயேயெண் ... இசைவோமே

வளர்ப்பிறைத்தனி மதிபோலேகுண
நலத்தொடும்வளர் குழுவானேமுண
பணிச்செய்யும் ஒருவழியாலேகுரு ... பெருமானே

அ. நம்மாழ்வார் F. T. S.

# ஞானோதயம்.

பிரம்மஞான மாதாந்தப் பத்திரிகை.

தொகுதி 17 | 1926-ஞு நவம்பர்-மீ 11உ | பகுதி 5.


## டாக்டர் அன்னிபெஸண்டு அம்மையாரின் 80-ம் வருஷப்பிறப்பு.

(1926ஞு அக்டோபர்மீ 1உ)

—x—

"அன்னை பெஸண்டிந்த அவனியுற்றேயின்று
ஆகுமெட்டுப் பத்ததாம்
ஆண்டுள் அதற்குழைத் தாண்டவர்க் கர்ப்பித்த
தாயேயளப்பறியளாம்
முன்னைப்பழம்பொருட் குமரர்முன் னின்றவரின்
மொழியிவண் நேரில் ஏற்கும்
மொய்ம்புடைய அம்மணியை மொழியவே நாமுமே
முற்றவமிகச் செய்துளோம்
என்னைப் பராபரத் தத்துவமதோர்ந்திடா
ஏழையாம் மாந்தரிவரை
ஏற்றிடாதேமாறுதற்கே இரங்கி நாம்
இன்பவன்பவர் மீதிலும்
உன்னப் பராவுவோம் உடையானருள் அவரை
ஊடுறவி அருள்கவென்றும்
ஓவ்வியே அம்மையால் உலக உத்தாரணம்
ஓங்கிடுகவென்றும் நாமே.—"

K. S. இராமஸ்வாமி அய்யர்

தமிழ் ... 21804

# * உன்னை நீ அறி.

மனிதனுக்கு சொந்த விஷய விசாரத்தை விட முக்கியமானதாகட்டும் உத்ஸாஹமுள்ளதாகட்டும் வேறொரு விஷயம் இல்லையென நான் நினைக்கிறேன். மனிதன் சாதாரணமாய் 15 அல்லது 16 வயதில் ஸ்வப்பிரயோஜனத்திலேயே மூழ்கியிருப்பான். அவனுக்கு அதைவிட விசேஷ சந்தோஷகரமுள்ளது எதுவுமில்லை. இன்னும் கொஞ்சகாலங்கடந்தபின்னர் அவனுக்கு ஒரு பெண்ணினிடம் மோஹம் ஜனிக்கும். ஆனால், இப்பொழுதும் அவனுக்கு ஸ்வலாபசிந்தையே அதிகம். தன் அறிவு தெளிவுகளை அதிக விஸ்தாரமாய் சொந்த விஷயத்தில் உபயோகிப்பதையும், இதரானுடைய யோகக்ஷேமங்களை அவ்வளவாக நினையாமல்போவதையும் நாம் பார்க்கின்றோம். ஸாமுத்ரீகம் தெரிந்தவனை வரவழைத்து அவனுக்கு மனப்பூர்வமாய் 15 ரூபாய்கள் கொடுத்துத் தன் வருங்கால சரித்திரத்தையெல்லாம் தெரிவிக்கும்படி வேண்டிக்கொள்வான். அதைத்தெரிந்துகொண்ட பின்னர் தான் கஷ்டப்பட அவசியமில்லாமலே தனக்கு மகத்தானயோகம் இருக்கிறதென நினைத்து நினைத்துப் பூரித்துக்கொண்டிருப்பான். இதைப்பார்க்க நமக்கு ஒரு விஷயம் மனோரஞ்சிதமாயிருப்பதாகப் புலப்படுகின்றது. அது ஸ்வலாப அபேட்சை. ஆத்மவிசாரம் செய்துகொண்டு "நமது ப்ரவர்த்தி மிகவும் நன்றாயிருக்கிறது, நாம் அபிவிருத்தி அடைந்துகொண்டு இருக்கிறோம்" என எண்ணிக்கொண்டு திருப்தி அடைகின்றோம்.

நாம் இந்த ஸ்வலாப புத்தியிலேயே மனதை நிறுத்துவோமாகில், ஸ்வலாப அபேட்சையே முடிவு என்னும் திருஷ்டியோடு நாம் இருக்குமளவும், நமது வாழ்நாளின் பிரயோஜனத்தையாகட்டும், பிரபஞ்சத்தில் எதுவாகட்டும் எதற்காக சிருஷ்டிக்கப்பட்டதென்றும் அறியமாட்டோம். பிரபஞ்சம் எல்லாவற்றையும் குறித்து அறிந்து கொள்வதற்கு முன்னர், "தன்னைத்தான் அறிந்துகொள்ளல் அவசியம்" என்னும் வார்த்தை உண்மை என்பதற்குச் சந்தேகமில்லை. மேலும் தத்வ சாஸ்திரங்கள், மதமுதலாவுள்ளவைகளெல்லாம், ஒரு மனிதன் சில சங்கடங்களினின்று தப்பித்துக்கொள்ளுதல், அனிஷ்டங்கள் தனக்கு வரவொட்டாமல் செய்துகொள்ளுதல் இவைகளை போதிப்பதையே முக்கிய பிரயோசனமாய்க் கொள்ளுமாகில் உண்மையில் அவைகளால் பிரயோசனம் இல்லையென்றே சொல்லலாம்; இருந்தாலும் வெகு சொல்பமென சொல்லத்தகும். ஆனால் ஜாதக சங்கமுதலாயுள்ள சங்கத்தினர்கள் இந்த சிருஷ்டியில் ஒரு ஒழுங்கு இருக்கிறதெனவும், அந்த கிரமப்பிரகாரம் இன்னது என்பதையும் தெரிந்துகொள்ளவேண்டியிருக்கிறது.

* ஸ்ரீமான் கிருஷ்ணமூர்த்தியவர்களின் உபந்யாஸச்சுருக்கம், தெலுங்கு திவ்யஞான தீபிகையிலிருந்து பத்திராதிபரால் மொழிபெயர்க்கப்பட்டது.



நாம் நமக்கு உண்மையில் பிரயோஜனகரமாயுள்ள விஷயங்கள் யாவையென சோதித்துத் தெரிந்துகொள்ளக்கடவோம். அவ்வித விஷயங்களை பரிசோதித்துப்பார்க்கும் சக்தி நமக்கு இருக்கின்றது. நம்மில் எல்லோருக்கும் நமது நிஜ ஸ்வபாவத்தை எவ்வளவு வரைக்கும் கண்டுகொள்ளக் கூடுமோ அதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றும், நம்மை ஆகர்ஷிக்கும் விஷயங்கள் எவைகளோ அவைகளைக்கண்டு பிடிக்கவேண்டுமென்றும் ஆசை இருக்கின்றது. ஜனஸமூகத்திற்கு, சாதாரணமாய் சொந்தவிஷயத்திலிருக்கும் அபிருசி இதராள் விஷயத்திலில்லை. ஸம்பத்து, சௌக்கியம், போகம் இவைகளெல்லாம் தனக்கு வேண்டுமென்றே கோருகிறார்கள். தனக்கு பூர்த்தியாய் இவைகள் வந்து நிரம்பியபின்னர் இதராளுடைய விஷயத்தை ஆலோசிக்கிறார்கள். "எனக்கு வேண்டிய ஆகார நித்திரை முதலியவைகளை அடைந்த பின்னர் இதராள் விஷயத்தைப் பார்க்கிறேன்." என்பதே இப்போதுள்ள ஸாமான்ய ஜனங்களின் அபிப்பிராயமாயிருக்கிறது. சொந்த விஷயத்தில் பிரேமை, சௌக்கியம், அபிவிருத்தி இவைகளையடைந்திருக்கையில் இதராள் விஷயமாய் ஆலோசனை உண்டாகும்.

அவ்வித சௌக்கியத்தை அடையவேண்டின், இந்த ஸ்பஷ்டமான சிருஷ்டி சங்கற்பத்திற்கு நாம் எம்மட்டிற்குத் தகுந்தவர்களாக இருக்கிறோமோ அதைத்தெரிந்து கொள்ளவேண்டும். இந்த சங்கற்பத்தில் நம்மெல்லோருக்கும் ஒவ்வொரு ஸ்தானம் ஏற்பட்டிருக்கின்றது; அதற்குத்தகுந்த வேலையை நாம் செய்யவேண்டுமென்னும் திட நிச்சயத்தோடு நாமிருக்கவேண்டும். அந்த திட நிச்சயத்தால் நமக்கு தகுந்த ஆவரணம், அல்லது த

தானம் ஏற்படுத்திக்கொள்ளல்வேண்டும். நமக்கு ஸம்யக்திருஷ்டி இருக்குமாகில் இந்த ஸ்தானத்திற்கு நாம் எவ்வளவு வரைக்கும் தகுந்தவர்களாயிருப்போமோ அது புலப்படும். என்னை தேவலோக ஸ்தானத்தில் நியமித்தார்களென வைத்துக்கொள்வோம். அப்படியாயின், அதற்கு ஸம்பந்தப்படாத வேலைகள் எதைச்செய்யினும் அது பிரயோஜனமற்றதே. அதற்கு அனுகூலமாயுள்ள வேலைகளை செய்வேனாகில் நான் விருத்தி அடைவேன். சுகமும் உண்டாகுமென நினைக்கிறேன். இவ்வித ஸம்யக்திருஷ்டி விஷயத்தில் எனக்கு அபிருசி உண்டாயிருந்தமையால் என்னை நான் ஜாக்கிரதையோடு பரிசீலித்து வந்தேன். பிரதி வருஷமும் என்னிடம் ஒரு புதிய மாறுதல் ஏற்படுவதை நான் கண்டுபிடித்தேன். நூதன நாகரீகம் தலையெடுப்பதாய் காணப்பட்டது. எனது ப்ரகிருதியெல்லாம் நன்றாய் மாறிப்போயிற்று. எனது பதவி எதுவோ அதை நான் கண்டுகொண்டேன். இவ்விதமாகவே நம்மில் ஒவ்வொருவரும் தம் தம் தருமம் எதுவோ அதைத்தெரிந்து கொள்ளல்வேண்டும்.

குருபாதங்களாகிய ஹோமகுண்டத்தில் நமது நிர்மலபக்தியாகிய ஹோமதிரவியத்தை அர்ப்பணம் செய்வதில் அதிக குதூகலம் நம்மில் அனேகருக்கு உண்டு. நம்மில் அனேகரிடம் பக்தி பல படித்தரங்களிலிருக்கின்றது. ஆகையால் ஒரு தரகதி பக்தியால் நாம் திருப்தி அடையக்கூடாது. நான் அன்னை வஸந்தம்மையாரிடம் சென்று, "நான் எவ்விதமாகிலும் உங்கள் ஸேவை புரிய எண்ணி இருக்கிறேன். நான் எதையாகிலும் தியாகம் செய்வதற்கு சித்தமாக இருக்கிறேன். எனது ஸ்வேச்சை சுகம் எல்லாவற்றையும் விட்டுவிடுகிறேன். தொண்டுபுரிதலே எனது முக்கியமான கோரிக்கை" எனவிண்ணப்பம் செய்துகொண்டால், அம்மாள் "ஓஹோ! மிகவும் நன்றாயிருக்கின்றது. ஆனால் உனக்கு எந்த வித்தையில் பாண்டித்தியம் உளது. உலகஸேவை எவ்விதம் செய்வதில் உனக்கு அபிருசியுண்டு" என்று என்னையே வினவுவார்கள்.

பக்தி கார்யரூபமாகப் பரிணமித்தல்வேண்டும். நமக்குள்ள சக்தி விசேஷங்கள் எவையோ அவைகளைத்தெரிந்து கொள்ளவேண்டும். பின்னர் நாம் எவ்விதமாய் ஸேவைசெய்யவேண்டுமோ அதை நிச்சயித்தல்வேண்டும். அதற்கு அப்பால் நாம் குருநாதர்



களுக்கு ஆத்ம ஸமர்ப்பணம் செய்துகொள்ளல்வேண்டும். பிரம்மஞானஸபை அங்கத்தினருக்காகட்டும், தாரகசங்க அங்கத்தினருக்காகட்டும், மேலும் இதர பக்தனுக்காகட்டும் "உன் ஸர்வத்தையும் தியாகம் செய்து குருக்களை அடை" என்னும் ஆக்ஞை வருமாகில் அப்படிப்பட்டவர் குருபாதங்களைச்சேர்ந்து, "இதோவந்தேன், எனது பக்தியை உமக்கு ஸமர்ப்பிக்கிறேன்" எனச்சொல்லுதல் போதாது. வெறும் பக்தி உண்டாயிருத்தல் போதாது. நாம் அவருக்கு ஏதேனும் கொஞ்சம் ஸமர்ப்பிக்கவேண்டும். தத்துவாரா அவர் நமக்கு உதவிபுரிவார். நாம் அவருடைய ஸேவையை ஏதோ ஒரு விதமாய் செய்வதற்குத்தகுந்த சாமர்த்தியத்தை ஸம்பாதித்தல்வேண்டும். ஆகையால், வெறும் கையோடு அவரிடம் போகக்கூடாது. குருவினிடம் சென்று "நான் நன்றாய் எழுதுவேன், அல்லது சித்திரங்களை வரைவேன். ஸங்கீதம் சொல்வேன், அல்லது நாடகத்தில் நடிப்பேன்" என்று சொல்லக்கூடியதாக இருக்கவேண்டும். அப்பொழுது அவர் "ஸரி அதுவே உன் மார்க்கம், உனக்கு எந்த எந்த விஷயங்களில் ஸ்வபாவ ஸித்தமாய் அபிருசி பாண்டித்தியமுள்ளதோ அவற்றைக் கண்டறிந்துகொள். அது உனக்குத் தெரியுமாகில் உனக்கு கஷ்டப்படுதல் எவ்விதம், ஸேவித்தல் எவ்விதம் என்பது தெரியும்" எனச்சொல்வார். "நான் இதைச்செய்வேன் இம்மார்க்கத்திலேயே நான் ஸ்வலாபத்தை தியாகம்செய்து குருக்களை ஸேவிப்பேன்" என சொல்லக்கூடியவர்கள் மிகவும் சொற்பப்பேர்கள். நாம் சுலபமாய் விட்டொழிக்க வேண்டியதை விட்டொழித்து, தியாகம் செய்யாமலே ஏதோ ஒரு வேலைசெய்து, அதனாலேயே நாம் தியாகம் செய்தோமென எண்ணுகிறோம்.

குருக்கள் என்னை எதைச்செய்யவேண்டுமெனக் கோருவார்களோ அது எனக்குப் புலப்பட்டால் என்மனம் மாறிப்போகும். நான் வேறுவிதமாய் பிரவர்த்திப்பேன். எனக்கு தனம் வேண்டினால் அதை சம்பாதிப்பேன். ஆனால் அது ஸ்வப்பிரயோசன பாவனையை ஒழித்து, குரு ஸேவைக்காக ஸம்பாதிக்கிறேன் என்னும் பாவனையோடு இருக்கும். தியாகம் செய்யவேண்
பாவனையோடு இருத்தல்வேண்டும். இவ்விஷயத்தி
கள் படவேண்டியிருக்கும். அபவாதங்களுக்கு
வேண்டியிருக்கும். இவைகளை நான் சகிப்பதற்

இருத்தல்வேண்டும். இவ்வித பாவனையே முக்கியம். நமக்குள்ள சக்திகள், நமக்கு நிர்ணயிக்கப்பட்ட மார்க்கத்தில் செல்லமாட்டாதவைகளென நாம் பயப்படுகின்றோம். ஆகையால் நாம் வாஸ்தவமாய் ஸேவை செய்வதற்கு முன்னர் அவருக்கு எவ்விதமாய் ஸேவை செய்யக்கூடுவோமோ எவ்விதமாய் தியாகம் செய்யக்கூடுவோமோ அதை நிச்சயப்படுத்திக் கொள்ளல் வேண்டும். இவ்விதம் நமது மார்க்கம் எதுவோ அதைத் தெரிந்துகொள்ள பிரயத்தனிக்கின் நாம் எந்த தாகதியில் சேருவோமோ அது புலப்படும். ஒரு படித்தரத்தால் ப்ரபஞ்சத்தை அனுஸரித்து அதை ஒட்டி நிர்மதியாக விருத்தி அடைவார்கள். மற்றொரு படித்தரத்தால், உஷ்ண யந்திரங்களின் சாதனங்களாலே செடிகள் சீக்கிர காலத்தில் வளர்ந்து பலத்தைக்கொடுப்பதுபோல், தீவிர பிரயத்தனங்களாலே சீக்கிரகாலத்தில் அபிவிருத்தி அடைந்தும், அப்படியே சக்தி, ஞானம் இவைகளை ஸம்பாதித்தும் விடுகிறார்கள். இதில் நாம் எந்த தரகதியில் சேருவோமோ அதைத்தெரிந்து கொள்ளல்வேண்டும். சிலர் அனேக வருஷங்கள் வேலை செய்துகொண்டு, சகல காரியங்களையும் நிறைவேற்றிக் கொண்டிருப்பார்களே யொழிய அவர்களின் வாழ்நாளின் உத்தேசத்தைத் தெரிந்துகொள்ள மாட்டாமலிருப்பார்கள். சிறிது காலத்திற்குப் பின்னர் திடீரென தங்கள் ஸ்தானம் எதுவோ அதை அறிந்துகொள்வார்கள். ப்ரபஞ்ச ஞானத்தை கிரமமாய் ஸம்பாதித்து இருப்பார்கள். அதற்கு அப்பால் அவர்களுக்கு அத்யாத்மிக தத்துவங்கள் போதிக்கப்படும்பொழுது அவைகளைத் தெரிந்துகொண்டு அவர்களுக்குள்ள ஸர்வத்தையும் அதற்காக தியாகம் செய்வார்கள். தீவிர பிரயத்தனம் செய்பவர்கள் தமது ஸ்தானத்தை வேறொரு மார்க்கத்தில் அமைத்துக்கொள்வார்கள். இரண்டு லோகங்களிலும் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயம் எது இருக்கிறதோ அதையெல்லாம் தெரிந்துகொள்ளின் எம்மார்க்கத்தை அவலம்பிக்கினும் வித்தியாசமில்லை. அதைத் தெரிந்து கொண்டாலொழிய நீ உலக ஸேவை செய்யமாட்டாய். தேவாலயத்தில் வளர்ந்துவந்த மனிதனுடைய மனம் சங்கடமாயிருக்கும். அதுவுமன்றி அவன் மனம் சில மித்தியாசார ஸம்பிரதாயங்களாலே சிக்குகள் ஏற்பட்டிருக்கும். அவன் கிணற்றுத்தவளையைப் போலிருப்பான். அப்படிப்பட்டவன் பிரபஞ்சத்தில் சஞ்சரிக்கத் தொடங்கியவுடனே அவனுக்கு எல்லையே



ஸ்வேச்சை ஏற்பட்டு அதிக உத்ஸாகத்தோடு இருப்பான். அவ்விதமே பிரபஞ்சத்தில் வேலை செய்யும் மனிதனுடைய பாவனையும் கூட இருக்கும். ஒரு மார்க்கத்தில் நாம் அபிவிருத்தி அடையமாட்டோம். எல்லாவிஷயங்களிலும் நாம் ஞானத்தை ஸம்பாதித்தாலொழிய, நாம் உதவி செய்யாமற்போவது மாத்திரமன்றி இடையூறுகளும் உண்டாகும்படி செய்வோம்.

என்மார்க்கத்தை நான் எவ்விதம் தெரிந்துகொண்டேனோ அவ்விதமே நம்மில் ஒவ்வொருவரும் தன் மார்க்கம் எதுவோ அதைத்தெரிந்துகொள்ள முயற்சிக்கவேண்டும். அவ்விதம் தெரிந்துகொண்டாலொழிய நாம் அவர்களுடைய ஸேவையை செய்ய முடியாது. ஆலோசிக்கும் சக்தி ஏற்பட்டிருந்து, ஜீவியத்தின் பேரில் மமகாரமற்றவர்களுக்கு மார்க்கம் புலப்படும். நம்மில் அனேகம் பேர்களுக்கு ஸேவையில் அவா இல்லை. நாம் அடைய வேண்டிய ஸ்தானத்தை அடைவதற்கு விருப்பமும் இல்லை.

நமக்கு நேரிட்ட சிக்கு என்னவெனின், உலகத்தார்களைப் போலவே நமக்கும் ஸ்வலாபவிஷயங்களிருக்கின்றன. அவைகளில் நமக்கு ஆவல்மிகுதி. இந்த ஸ்வலாபத்தை விட்டொழித்தாலொழிய நமக்கு மார்க்கம் புலப்படமாட்டாது. நம்மில் ஒவ்வொருவரும் மஹாபிரபு அவதரிக்க வேண்டுமெனக் கோருகிறோமேயொழிய அவர் அவ்விதம் அவதரிக்கின் நாம் அவருக்கு நன்றாய் ஸேவை செய்வதற்குத்தகுந்த ஸாமர்த்தியத்தைச் சம்பாதிக்காமல் போவதால் அவருக்கு ஸேவை செய்யமாட்டோமெனத் தெரிந்துகொள்ளாமலிருக்கிறோம்.

அவருக்கு எப்படி நாம் சேவைசெய்யக்கூடுவோமோ அதைத் தெரிந்துகொள்ளவேண்டும். அவ்விதம் தெரிந்துகொள்ளல் எனின், தனது ஸ்வலாபத்தை பூர்த்தியாய் தலைகீழாகச் செய்தது போலாகும். தன் இன பந்துக்களுக்கு விரோதமாயிருக்கவேண்டியிருக்கும். நமக்கானால் கோரிக்கையில்லாது போகவில்லையே ஒழிய மஹான்களான அவர்களுக்குள்ள தீவிரமான கோரிக்கையில்லை. நம்மிடமக் கோரிக்கை இடைவிடாமல் நித்தியம் ஒருவழியாய் இராது. நாம் எப்பொழுதும் அவரது ஸேவையை மென்மேலும் விசேஷமாய்ச் செய்வதற்குவேண்டிய தீவிர இச்சையில்லை. அதுவே நிஜமானத்தியாகமென எண்ணுவார். பிரதி விஷயத்தி

லும் ஸ்வலாபத்தை ஒழித்தலும், எப்பொழுதும் அஹங்காரம் மேலுக்கு வராமல் செய்தலும்வேண்டும். அப்பொழுது விஷயங்களை நமது மனோவிகாரங்களுக்குத் தக்கபடி மாற்றுவதற்குப் பிரயத்தனிக்காமல் அதனுடைய நிஜ ஸ்திதியைப் பூர்த்தியாய் ஒழுங்கான புத்தியால் தெரிந்துகொள்வதற்கு முயற்சிப்போம். அதாவது நாம் உண்மையாய்க் கபடமற்ற ஹிருதயமுள்ளவர்களாவோம்.

ஸ்வலாபத்தை விட்டொழிப்பதற்கு நமக்குத் தகுந்த தைரியம், மனோநிச்சயம்வேண்டும். ஸ்வலாபத்தைவிட்டு சில தூரங் கடந்தபின்னர் மனிதன் எவ்வளவு ஸ்வல்ப விஷயத்திற்காக கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தானோ அதை அறிந்துகொள்வான். அனேக விஷயங்களுக்காக நாம் எவ்வளவோ சிக்குகளில் அகப்பட்டு உபத்திரவப்பட்டுக்கொண்டிருக்கிறோம். நமக்கு உதார புத்தியுண்டானவுடனே, இவையெல்லாம் அற்ப விஷயங்களெனப் புலப்படும். எல்லா சிக்குகளும் நசிக்கும். இவ்வித திருஷ்டி உண்டாகவேண்டுமானால் இடைவிடாமல் ஆத்மவிசாரஞ் செய்துகொண்டிருக்கவேண்டும். நாம் சரியான வேலை செய்துகொண்டிருக்கிறோமா தப்பான வேலை செய்து கொண்டிருக்கிறோமா என்றும் பார்த்துக்கொண்டிருக்கவேண்டும்.

நம்மில் ஒவ்வொருவருக்கும் இவ்விஷயங்களெல்லாம் தெளிவாய்த் தெரியுமே ஒழிய ஜகத்குரு அவதரித்தபொழுது நம்மெல்லோரையும் "நீங்கள் ஒவ்வொருவரும் எவ்விதம் ஸேவை செய்யக் கடவீர்கள்? நான் வருமுன் எவ்விதம் செய்தீர்கள்? உங்கள் பதவிகளை எவ்விதம் ஸபலமாகச்செய்தீர்கள்?" எனக்கேட்கின் அவருக்கு நாமென்ன பிரதி உத்தரம் அளிக்கவேண்டியிருக்கும்? நமக்கு விசுவாசம் பூரணமாயிருக்கினும் அது பூரண நிச்சயத்தோடு வேலை செய்பவனுக்குள்ள நம்பிக்கையளவு திடமுள்ளதன்று. ஆனால் குருவிற்கு வேண்டிய ஸேவகர்கள் அப்படிப்பட்டவர்களே ஒழிய, வெறும் பக்தியுள்ளவர்களன்று. ஆகையாலெவர்கள் தனது அபிவிருத்தியைப் பொருட்டாக நினையாமல் ஸேவையினிடத்தே தங்களைத்தாங்கள் மறந்திருப்பார்களோ அவர்களே நிஜமான ஸேவகர்கள், அவர்களே குரு சன்னதியை அடையத் தகுந்தவர்கள். நான் பால்யனானபடியால் பெரியோர்கள் கஷ்டம்



அனுபவித்ததுபோல், எனக்கு அந்த அனுபவமில்லாதுபோகலாம்; ஆனால் கஷ்டத்தால் உத்ஸாஹம் குறையுமானால் அவ்வித உத்ஸாஹத்தால் பிரயோஜனமில்லை. ஆனால் கஷ்டம் அனுபவிப்பதால் நமக்கு நேர்ந்த அனுபவம் எப்படிப்பட்டது?

நான் துவக்கத்தில் சொன்ன பிரகாரம் ஆத்ம விசாரத்தைவிட விசேஷ ஆனந்தகரமாயுள்ள விஷயம் வேறொன்று காணப்படமாட்டாது. அவ்விஷயம் ஒன்றே சிந்திக்கத்தக்கது. அவ்வித மனனம் அல்லது தியானத்தாலேயே மாறுதலுண்டாகும். பெரியோர்களை பலவந்தம் பண்ணுபவர் எவருமில்லை. ஆகையால் அவர்கள் ஸ்வேச்சையாய் செல்லுகிறார்கள். நாம் என்ன செய்யக் கடவோம், நாம் எம்மட்டும் தியாகம் செய்யக் கடவோமென்ற விஷயமே முக்கியமானது. நமக்கு எவ்வளவு சாமர்த்தியமிருக்கிறது என்றும், எவ்வித சக்திகள் நமக்கு இருக்கின்றன என்பதுமே முக்கியமான விஷயங்கள். ஒருவன் சில மனிதர்களைப் பார்த்து அவர்களிடம் பக்தியைக் காண்பிக்கின், நான் அவனைப்பார்த்து, இவன் எந்த விதமாய் தியாகம் செய்து இவ்வித பக்தியைக் காண்பிக்கிறான் என்று எனக்குள்ளேயே நான் ஆச்சரியப்பட்டுக்கொண்டிருப்பேன்.

இனி வருங்காலத்தில், காலம் வெகு வேகமாய் மாறிப்போவதற்குத்தக்கபடி நாமும் கூட மாறிக்கொண்டு போனாலொழிய பின்னடைந்துவிட நேரிடும். ஈசுவர ஸங்கல்பம் கொஞ்சமேனும் நமக்கு ஸ்புரிக்கின், அதனுடன் சரியாய் நாம் நடக்கவேண்டுமென்ற சங்கதி தெரியுமானால், நாம் அதோடு அனுசரித்து நடப்பதற்கு ஆரம்பித்தல் நன்று எனவும், இருந்தவிடத்திலேயே இருந்துகொண்டிருத்தல் நல்லதன்று எனவும் நமக்குப்படியும். தான் மாறுவதற்கு வேண்டிய பிரயத்தனம் செய்வதுவே முக்கியமானவேலை. கிழத்தனம் வந்தவர்கள் மாறமாட்டோமென நினைத்தல் கூடாது. கிழவர்களுக்கே மாறுதல் சுலபமாயிருக்கவேண்டும். ஏனெனில், அவர்களுக்கு வேண்டிய அளவு அனுபவம் ஏற்பட்டது. கஷ்டங்களை அனுபவித்திருக்கிறார்களேயொழிய மீளவும் முன்போலவே பரம உபேக்ஷையோடு காலத்தைக் கழிக்கிறார்கள். உங்களுக்கு தனத்தை சம்பாதிக்கவேண்டியிருந்தால் அவ்விதம் செய்யுங்கள். கோடானுகோடி தனங்கள் குவியுங்கள். ஜகத்குருவுக்கு அர்ப்பணம் செய்யுங்கள். உங்களுக்கு சரியான திருஷ்டி

இருக்குமேயாகில் அவ்விதம் செய்யக்கடவீர்கள். ஒவ்வொரு வேலையுங்கூட அவ்விதமே குரு ஸமர்ப்பண புத்தியோடு செய்யத்தகும். டைப்பு ஆகட்டும், ஷார்ட்ஹாண்டு ஆகட்டும் எதை செய்ய நேரிடினும் அதையெல்லாம் குரு ஸேவையாகச் செய்யுங்கள். அவ்வித புத்தியே பிரதானம். அவ்வித ஸமர்ப்பண புத்தி உண்டானவுடனே மற்றதெல்லாம் கைகூடும்.

## * ஸ்தூல சரீரம்.

ஸ்தூலம் சாசுவதமாயிருக்க சாத்தியமில்லை. துவக்கத்திற்கு முடிவுண்டு. பிறப்பு, வளர்ச்சி, முதுமை, மரணம் இவைகள் ஸ்தூலப்பிரபஞ்சத்தின் தர்மங்களாகும். விவேகி யெவனும் ஒரே சரீரத்தை நீடித்து வைத்திருக்கப் பிரியப்படமாட்டான். அது ஒரு சிறு குழந்தை தான் இளமைப்பருவத்தில் தரித்த அங்கி முதலியவைகளை யாவத்ஜீவபரியந்தம் தரிக்கப்பிரியப்படாததைப்போலாகும். மனிதன் விகாஸத்தை யடையும்பொழுது அவனுடைய இதர உபாதிகள் சுத்தமாயும், மேன்மையுடையவையாயும், அவனது அபிவிர்த்தியடைந்த சக்திகளின் தேவைகளுக்குத்தக்கவாறு நன்றாய் இணங்குபவைகளாயுமாகும். ஆகையால் ஒருவன் ஒரே சரீரத்தை வைத்துக்கொள்ளக் கூடுமானால் எவ்விதம் குழந்தையானது மிகவும் கெட்டியும் இறுக்கமுமான அங்கியை ஸதா தரித்துவந்தால் வளர்ச்சி தடைப்படுமோ அவ்விதம் அவன் தன் வளர்ச்சியையும் தடைப்படும்படி செய்வான்.

ஆனாலும் நமது சரீரங்களைப்பற்றி மிகுதியும் ஸாத்தியப்பட்டமட்டில் ஜாக்கிரதை யெடுத்துக்கொள்வதும் அவைகளை நம்மால் ஸாத்தியப்பட்டமட்டில் செம்மைப்படுத்துவதும் நமது கடமையாகும். ஸ்தூலசரீரத்தைக் கெடுதலாய் நடத்தப்படாது. நீ யெவ்விதம் உனக்குக்கிடைத்த விலையுயர்ந்த குதிரையை கவனிப்பாயோ அதுபோலவே சரீரத்திற்கும் போதுமான சிரமபரிஹாரம், உணவு முதலியவைகளைக் கொடுத்து முற்றிலும் பரிசுத்தமான ஸ்திதியில் இருந்துவரப்பார்க்கவேண்டும். அது ஒரு பிர

* "Inner Life" எனும் புஸ்தகத்திலிருந்து பத்திராதிபரால் மொழி பெயர்க்கப்பட்டது.



மாணத்திற்குள்பட்ட வேலையைத்தான் செய்யும். உதாரணமாக, மிகவும் பலமாயுள்ள ஒரு சரீரம் களைப்பின்றி 100 மைல் நடக்கலாமே ஒழிய அது ஆயிரம் மைல் நடக்கமாட்டாது. தியானத்தில் அதை ஒருவித சுகஸ்திதியில் வைத்துவிட்டுப் பின்னர் அதை மறந்துவிடு. அது சுகஸ்திதியில் இல்லாதிருக்கின் உன்னைத்தன் பக்கம் நோக்கும்படி செய்வதால் நீ அதை மறக்க முடியாது.

நீ எதைப் புசிக்கவேண்டும்? நீ லாகிரிவஸ்துக்களையும் மாம்ஸத்தையும் விலக்கியிருந்தாலே ஒருவாறு நன்மையே. சில காய்கறிகள் மற்றவைகளைவிட தாமஸகுணமுள்ளவைகளாயிருக்கின்றன. ஆகாரநியமத்தை யனுஷ்டிப்பவர்கள் அவ்வித காய்கறிகளையும் விலக்குவதே நலமாகும். அந்த இனங்களில் வெங்காயம், பூண்டு, முள்ளங்கி, கோசுக்கீரை முதலியவைகள் சேர்ந்தவை. அரிசி மிகவும் ஸாத்வீக உணவே. ஆனால் கோதுமை, பார்லி, ஓட்ஸ் முதலிய தானியங்கள் அரிசியின் அளவிற்கு விசேஷபோஷணசக்தியைக் கொடுக்கின்றன. எவ்வித உணவும் கிடைக்காதஸமயத்தில் மட்டும் ஒருவன் முட்டையை உட்கொண்டால் அது உசிதம் ஆகுமென்று கொள்ளலாம்.

மாம்ஸத்தை விழுங்குவதைவிட கந்தமூல உணவுகள் மிகவும் சிரேஷ்டமென்பதில் தடையேயில்லை. கந்தமூல உணவு உண்மையில் விசேஷ போஷண சக்தியைக் கொடுக்கின்றது. மேலும் அது நோய்க்கு உட்படுத்தும் ஹேதுவையும் குறைக்கின்றது. அது விசேஷபலத்தையும் கொடுக்கின்றது. அது கீழ் இந்திரியங்களைச் சேஷ்டிக்கும்படிக்கும் செய்வதில்லை. மேலான குணங்களை விர்த்திப்படுத்த விரும்புவோனுக்குக் கந்தமூல உணவுகள் மிகவும் அனுகூலமாயிருக்கும். நமது மஹான்கள் ஒரே ஸ்தூலசரீரத்தை ஸாதாரண மனிதர்கள் செய்வதைவிட அதிகமாய் சுகாதார விதிகளுக்குட்பட்டு ஸதாவசிப்பதாலும், கவலை கிஞ்சிற்றேனுமில்லாதவர்களாயிருப்பதாலும், நீடித்த காலமிருக்கும்படி செய்கிறார்களென்று நமக்குத் தெரியவருகின்றது. அவ்விஷயத்தில், நம்மால் இயன்றமட்டில் அவர்களைப்போல் ஒழுக நாமெல்லோரும் முயற்சிக்கவேண்டும். ஆனால் அதே சரீரத்தைக் காலவரம்பின்றி வைத்துக்கொள்ள இச்சிப்பவன் ஸ்வலாபமார்க்கத்தை அனுஸரிப்பவர்களுக்குள் வைக்கப்படுவான்.

ஸ்தூலசரீரத்தை வெகு நீண்டகாலம் பலவித அனுசிதமான உபாயங்களால் ஆதாவது சிலசமயம் இதராளுடைய உயிரையே இழுத்துக்கொள்ளும் ரக்தக்காட்டேரி ஸ்வரூபமாய் ஆவதாலும், சில ஸமயம் இதர ஜீவர்களைத் துடர்ந்து தங்களுக்குள் அவர்களை ஒருவர்பின் ஒருவராய் விழுங்கிக்கொண்டு அவர்களாலே தங்களை போஷித்துக்கொண்டு வருவதாலும், நிற்கும்படி செய்பவர்களுமுண்டு. பிர்ம்மஞானிகள் இவ்வித வழியைப் பின்பற்றாதிருக்க எச்சரிக்கை செய்யவேண்டிய அவசியமில்லை. அவ்விதவழியை யனுஸரிப்பவன் விகாஸமடையாதவர்களில் ஒருவனென்றே தெளிவாகும். ஒருவன் அது விஷயத்தில் சித்தியடைந்தாலுங்கூட, பழையசட்டையை ஒட்டுப்போட்டுத் தைத்துப் பெரிதாகப் பண்ணிக்கொண்டாலும் பழையசட்டையே போல் அவனது ஸகல முயற்சிகளும் ஆகும்.

ஆனதுபற்றியே தாயுமானவர் "காயகற்பம்தேடி நெஞ்சுபுண்ணானவரெல்லாம்" என்றார்.

# திவ்யஞானஸாரம்

## பதினைந்தாவது அத்தியாயம்.

## பாரமார்த்திக தர்மம் (பூர்வசேஷம்)

### சித்தசுத்தி.

மனுஷ்ய ஜன்மம் உத்தமமான ஜன்மமென்றும், அனேக கோடி இதர ஜன்மங்களுக்குப் பிறகு, புண்ணியபரிபாகத்தினால் மானிட ஜன்மம்வருமென்றும் பெரியோர்கள் சொல்லுகிறார்கள். சாஸ்த்ரங்களிலும் அப்படியே சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஜன்மம் லபித்ததற்கு, அதைப் பலனுள்ளதாகச் செய்யவேண்டுமென்றால், நாம் செய்யவேண்டிய வேலை எதுவோ அது நாம் ஒவ்வொருவரும் பலதடவைகளில் யோசித்துத் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயம். மனுஷ்யன் செய்யும் ப்ரயத்னமெல்லாம் நான்குவிதங்களான பலன்களை ஆசிரயித்து நிற்கின்றன. அவைகள் எவை என்றால், தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம், இவைகள் தான் "சதுர்வித புருஷார்த்தங்கள்" என்று சொல்லப்படும். அதாவது சிலர், பணத்தை ஆர்ஜிப்பது தான் முக்கியமான கருத்து என்று எண்ணி ப்ரயத்னப்படுவார்கள். சிலர் ஸுகங்களை



அனுபவிப்பதேதான் முக்யமான ப்ரயோஜனமென்பதாக எண்ணி, அந்த ஸுகங்களுக்கு ஸாதனமான த்ரவியத்தை ஆர்ஜித்துக்கொண்டு, அந்தக் காமங்களையே புருஷார்த்தமாகப் பாவிப்பார்கள். ஆகிலும், அர்த்த காமங்கள் அவசியமென்று எண்ணப்பட்டாலும், தர்மத்திற்கு விரோதமில்லாத வழியிலேயே த்ரவியத்தைத்தேடி, தர்மத்திற்கு விரோதமில்லாத போகங்களையே அனுபவிக்கவேண்டுமென்று, தர்மத்தை மூலபுருஷார்த்தமாகவும், முதலாவது புருஷார்த்தமாகவும் பாவித்துக்கொண்டு அதற்கு அனுகூலமாகவும், (மாறுபாடில்லாமலும்) அவிரோதமாகவும் அந்த அர்த்தகாமங்களை ஆர்ஜித்து அனுபவிப்பவர்கள் சிலர். இந்த மூன்றையும், புருஷார்த்தங்களாக எண்ணி அவைகளில் தர்மத்தைப் பிரதானமாக எண்ணுகிறவர்கள், இந்த மூன்று வகையார்களில் உயர்ந்தவர்கள். ஆனாலும் நான்காவது புருஷார்த்த முண்டல்லவா! அது பரம புருஷார்த்தமென்றும் மோக்ஷமென்றும் சொல்லப்படுகிறது. முதன்மையான மூல புருஷார்த்தத்தை மறக்காமல், இரண்டாவது, மூன்றாவதுகளை ஆர்ஜித்து அனுபவிப்பதன் மூலமாய் அவைகளின் யதார்த்த ப்ரயோஜனத்தைக் கைக்கொண்டவர்களுக்கு நாலாவது புருஷார்த்தம் ஸுலபமாக ஸாதிக்கக்கூடியது.

இந்த உத்தமமான புருஷார்த்தத்தை, ஸாதிப்பதற்கு சித்தசுத்தி ஆவச்யகம். சித்தசுத்தி இல்லாமலே செய்யும் கர்மங்கள், தானதர்மங்கள், உபாஸனைகளும், பரம புருஷார்த்தத்தை அடையும்படிச் செய்யமாட்டாது. "சித்தசுத்தி இல்லாத சிவபூஜைகள் ஏனய்யா" என்றவேமனவாக்யம் எல்லோருக்கும் தெரிந்ததே. இந்தச் சித்த சுத்தியை எப்படிக்கைக்கொள்ள வேண்டுமோ அதைத்தெரிந்துகொண்டு, அந்த மார்க்கத்தை அவலம்பித்து, ஸாதிப்பது ப்ரதிமனுஷ்யனும் அவச்யம் செய்யத்தக்கது. இதற்கு முதல்படியாக மானவதத்வத்தை, அதாவது ஜீவஸ்வரூபத்தைக்கொஞ்சம் தெரிந்துகொள்வோம்.

### ஜீவஸ்வரூபம்.

மனுஷ்யனுக்குத் தன்னுடைய ஸ்வரூபத்தைத் தெரிந்துகொள்வதைவிட உயர்ந்த ஞானம் வேறுகிடையாது. மற்ற விஷயமான ஞானமெல்லாம் இந்த ஸ்வரூப ஞானத்திற்கு உதவியானதாகையால் தான் அவைகளையும் ஒருவாறாக ஞானமென்று வழங்

குகிறோம். இல்லாவிடில், அதெல்லாம் ஞானத்திற்கு வ்யதிரேகம் தான். ஆகையால் "நான், நான்" என்றெண்ணுபவன்யார்? ஸாமான்யமாக நம் கண்களுக்குத்தெரிகிற சரீரத்தைத்தான் நாமென்று நாம் நினைக்கிறோம். சரீரமென்பது என்னுடையதே தவிர, சரீரம் நானல்லவென்று அறிந்துகொண்டவன் ஸ்வ ஸ்வரூபத்தைக்கொஞ்சமாவது தெரிந்தவன் ஆவான். நான் ஜீவன், சரீரமல்ல. சரீரங்கள் அநித்யங்கள், நசிப்பவைகள். பிறப்பு, வளர்ப்பு, சுருங்குதல், இறப்பு (பிறத்தல், வளர்தல், சுருங்குதல், இறத்தல்) முதலான விகாரங்களுக்குட்பட்டவைகள். ஆகையால், ஆதியும் அந்தமும் (முதலும் முடிவும்) உள்ளவைகள். ஜீவனோ நித்யன், இந்த சரீரம் பிறப்பதற்கு முந்தியும் இருந்தவன். இந்த சரீரம் நசித்தபிறகும், அதாவது, சரீரம் மரணமடைந்தபிறகும் இருப்பவன்.

அந்தவந்த இமே தேஹா நித்யஸ்யோக்தாஶ்ஶரீரிண: ।
(கீதை அத். 2. சு. 18.)

தேஹீ நித்யமவத்யோऽயம் தேஹே ஸர்வஸ்ய பாரத ।
(கீதை அத். 2. சு. 30.)

ந ஜாயதே ம்ரியதே வா கதாசி-
ந்நாயம் பூத்வா பவிதா வா ந பூய: ।
அஜோ நித்யஶ்ஶாஶ்வதோऽயம் புராணோ
ந ஹந்யதே ஹந்யமானே ஶரீரே ॥
(கீதை. அத். 2. சு. 20.)

பகவத்கீதை, 2-வது அத்யாயத்தில் முதல் பாகமெல்லாம் ஜீவனுடைய நித்யத்வத்தையும் (எப்பொழுதும் இருப்பதையும், சரீரத்தினுடைய அநித்யத்வத்தையுமே (தேகம் நிலையாமையைப் பற்றியுமே) போதிக்கின்றது. இப்படி நித்யனான ஜீவனுடைய ஸ்வரூபமென்ன?

## ஜீவன் ஈச்வராம்சம்.

ஜீவன் ஈசுவரனுடைய அம்சம். அதாவது ஈசுவரனிடமிருந்து வெளிவந்தவனென்று சொல்லத்தகும். இதன் அர்த்தத்தை நன்றாக அறிந்துகொள்வதற்குச் சில உபமானங்கள் ஸஹாயமாக இருக்கும். (1) பெரிய ஆலமரத்திற்கும், ஆலம் விதைக்கும் எப்படிப்பட்ட ஸம்பந்தம் உண்டோ அப்படிப்பட்ட ஸம்பந்தம் ஈசுவரனுக்கும் ஜீவனுக்குமுண்டு. அப்படியே பெரிய அக்னி ஜ்வாலைக்கும் (எரிச்சல்) அதிலிருந்து வெளியாகும் நெருப்புப் பொறிக்குமுள்ள ஸம்பந்தம்.



யதா ஸுதீப்தாத் பாவகாத் விஸ்புலிங்கா:
ஸஹஸ்ரஶ: ப்ரபவந்தே ஸரூபா: ।
ததாக்ஷராத் விவிதா: ஸோம்ய பாவா:
ப்ரஜாயந்தே தத்ர சைவாபியந்தி ॥
முண்டகோபநிஷத்

நன்றாக எரிந்துகொண்டிருக்கும் பெரிய ஜோதியிலிருந்து ஆயிரக்கணக்கான விஸ்புலிங்கங்கள் (நெருப்புப் பொறிகள்) ஜோதியுடன் ஸமானமான ஸ்வரூபமுள்ளவைகள் எப்படி வெளியாகின்றனவோ, அப்படியே அக்ஷர (அழியாத) ஸ்வரூபனான ப்ரஹ்மத்தினின்று ஜீவர்கள் (பாவா:) வெளியாகின்றார்கள் என்று பாவம்.

வெளியாகின்றார்கள் என்று சொன்னதால் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு வருகிறார்களென்று எண்ணக்கூடாது. ஈசுவரனெங்கும் நிறைந்துகொண்டிருக்கிறவன். அவனுக்கு வெளி என்பது ஒன்று இல்லை. அந்தத் தத்வத்திலிருந்து வேறானதும் கிடையாது. ஆகையால், வெளியாகுவதென்றால் ப்ரக்ருதியுடன் சேர்ந்து வெளியானதென்றறிந்து கொள்ளவேண்டும். அம்சம்போலிருக்கிறவனென்றும், வெளிவந்தாற்போல் காணப்படுகிறவனென்றும், கிரந்தங்களில் ஸூசிக்கப்பட்டிருக்கிறது. மேற் சொன்ன உபமானங்களிலிருந்து நாம் தெரிந்து கொள்ளவேண்டிய விஷயமென்ன? ஆலம் விதையில், அத்ருச்யமாக (கண்ணுக்குக்காணப்படாமல்), ஆலமரத்தின் சக்தி முழுவதும் அடங்கியிருந்து, தகுந்த பூமியில் விழுந்து, மண்ணால் மூடப்பட்டு, ஈரம் உறைத்து, உஷ்ணம் உண்டாகவும், அந்த பீஜத்திலிருந்து மொக்கு உண்டாகி, முளையாகி, சிறிய செடியாகிக் காலக்ரமத்தில் வெயிலில் தபித்துக் காற்றினாலடிக்கப்பட்டு, உறுதியாகி, வ்யாபித்து முன்மரத்தைப்போல் பரிபூரணமாக எப்படி

வெளியாகின்றதோ, அப்படியே ஈசுவராம்சமாகிய ஜீவனிடத்தில், பீஜத்திலிருக்கும் வ்ருக்ஷம்போல், ஈசுவரனுடைய எல்லா சக்திகளும், கண்ணுக்குக்காணாமல் அடங்கியிருக்கின்றன. ஆனால் ஈசுவரனிடத்தில், சக்தி முழுமையும் பூரணமாக ப்ரகாசித்து வ்யக்தமாகிக்கொண்டிருக்கையில், ஜீவனிடத்தில் அந்த சக்திகள்யாவும், பீஜரூபமாக இருக்கின்றன. ஸம்ஸாரமென்ற க்ஷேத்திரத்தில், ப்ரவேசித்து ஸுகதுக்கங்களென்ற, சீதம், வாதம், உஷ்ணங்களால், பீடிக்கப்பட்டு, வேறு வேறு, அனுபவங்கள் மூலமாக ஞானத்தை அடைந்து, ஜீவனும், ஈசுவரன் நிலையளவு ஆகக்கூடியவனாவான்.

மேல் உதஹரித்த உபநிஷத்வாக்யத்தில் ‹‹ஸாவா:›› (ஜீவர்கள்) ‹‹ஸரூபா:›› (ஈசுவரனுடன் ஸமானரூபங்கள் உள்ளவர்கள்) என்று ஸூசிப்பித்திருக்கிறது. அப்படி என்றால் ஈசுவரனுடைய சக்திகள், ஜீவனிடத்தில் அல்பமாக அதாவது பீஜரூபமாக இருக்கிறவை என்று பாவம்: அதாவது ஈசுவரன் ஞானஸ்வரூபன், ஸர்வக்ஞன். ஜீவனும் ஞானஸ்வரூபனாகிலும், "கிஞ்சிக்ஞன்" அல்பஞானமுள்ளவன். ஸர்வக்ஞன் (அகண்ட ஞானமுள்ளவன்) ஆக ஆகவேண்டும். ஈசுவர சக்தியாகப்பட்டது, அனந்த (முடிவில்லாதது)ம், அபாரம் (கரையில்லாதது). ஜீவனுடைய சக்தி அல்பமும் எல்லை உள்ளதுமாகும்; காலக்ரமத்தில் அபாரமும், அனந்தமும் ஆகவேண்டியது. இந்த உத்தேசம் நிறைவேற வேண்டுவதற்காகவே, க்ருபாநிதியாகிய ஜகதீச்வரன், நம்மை (ஜீவர்களை) பாஞ்சபௌதிகமாகிய (பஞ்சபூதங்களால் அமைக்கப்பட்ட) ப்ரபஞ்சத்தில் ப்ரவேசிக்கும்படி செய்தார். தகப்பன் தன் குழந்தைகளைப் பாடசாலைக்கு அனுப்பி, வித்யாவந்தர்களாகச்செய்து, தன்னளவு ஸாமர்த்தய முள்ளவர்களாகச் செய்வதுபோல், ஈசுவரன் ஜீவர்களை, ப்ரபஞ்சம், அதாவது, ப்ரஹ்மாண்டமென்கிற பாடசாலையில், ப்ரவேசிக்கும்படி செய்து, ப்ரபஞ்சானுபவத்தைக்கொண்டு, ஞானம் அபிவிருத்தியானபிறகு தன் நிலைக்கு ஸமானநிலையடைந்துள்ள புத்திரர்களைப் பார்த்து ஆனந்தஸ்பூர்த்தியடைகிறான்.

## ஜீவனின் உபாதிகள்—ஞான ஸாதனங்கள்.

ப்ரஹ்மாண்டத்தில் ப்ரவேசித்து, அந்தந்த லோக ஸம்பந்தமான ஞானத்தை ஸாதிப்பதற்கு ஜீவனுக்கு அந்தந்த லோக ஸம்-



பந்தமான சரீரம் வேண்டும். பூலோக ஞானமடைவதற்கு, பூலோக ப்ரகிருதியால் நிர்மாணமான சரீரம் வேண்டும். அப்படியே, புவர் லோகம் முதலான லோகங்களின் ஞானத்தை ஸாதிப்பதற்கு அந்தந்த லோகப்ரகிருதியால் அமைக்கப்பட்ட சரீரங்கள் வேண்டும். அந்த சரீரங்களுக்குத்தான், ஸாமான்யமாக ஸூக்ஷ்ம சரீரமென்றும் காரணசரீரமென்றும் சில க்ரந்தங்களில் பேர்களுண்டு. இப்போது, ஜீவனுடைய பரிணாமம் (விகாஸம், மலர்ச்சி) முக்கியமாக பூ: புவ: ஸுவ: என்கிற மூன்று லோகங்களில் நடந்து வருவதால், இந்த மூன்றுலோக உபாதிகளை முக்யமாய் நாம் தெரிந்துகொள்ள வேண்டியது. பூலோக சரீரந்தான் ஸ்தூல சரீரமென்று சொல்லப்படும். இந்த சரீரத்தைக்கொண்டு வெளிக்கார்யங்கள், லௌகிக கார்யங்களையும், வைதிக கர்மங்களையும் செய்வோம். இந்த சரீரத்தில் தான், சுரோத்ரம் (காது), சக்ஷுஸ்கள் (கண்கள்), ஸ்பர்சேந்திரியம் (சர்மம், தோல்) ஜிஹ்வை (நாவு), க்ராணம் (மூக்கு), எனும் அவயவங்கள் இருந்தபோதிலும், இந்த வெளியிலிருக்கும் அவயவங்களுக்கு மூலமான இந்த்ரியங்கள், புவர்லோக தத்வங்களால் அமைக்கப்பட்ட காமமய சரீரமென்ற ஸூக்ஷ்ம சரீர பாகத்தில் இருக்கும். ஸூக்ஷ்ம சரீரத்திலிருக்கிற இந்த்ரிய கோளங்களுக்கு (சக்ரங்கள்) ஸ்தூல தேஹத்திலிருப்பவைகள் வெளி அங்கங்கள் ஆகும். யதார்த்தமான இந்த்ரிய வியாபாரங்கள், ராகத்வேஷங்கள், ஆசா பாசங்கள், பலவிதமான மனோ விகாரங்கள், ஸூக்ஷ்ம சரீரத்திலிருக்கும். ராகத்வேஷங்களுடன் (விசுவாசம், பகைகளுடன்) கலக்காத, மனோ வ்ருத்திகள், ஸங்கல்பங்கள், ஸுவர் லோக சரீரத்தில் அதாவது, மனோமய கோசத்தில் உற்பத்தியாகும். இந்த சரீரங்களுடைய வ்யாபாரங்களை, சுத்தமாகச் செய்வதால் ஏற்படும் ஜீவனின் பரிபக்வந்தான் சித்த சுத்தி எனப்படும்.

## தெய்வாஸுர ஸம்பத்விபாகம்.

ஜீவன் ஈசுவராம்சனானதால் ஆத்ம லக்ஷணங்கள் பீஜ ரூபமாக ஜீவனிடத்திலிருக்கின்றன. சரீரங்களுடன் ஸம்பந்தப்பட்டு வேலை செய்வதனால், சரீர லக்ஷணமாயுள்ள ப்ரகிருதி தர்மங்கள், பலமாக இருக்கும். சரீரத்தை மட்டும் உத்தேசித்துப் பார்த்தால், ம்ருக சரீரத்திற்கும் மனுஷ்யசரீரத்திற்கும் தார தம்யம் அதிகமாக இல்லை. சரீர தர்மங்களாகிய பசி, தாஹம், தூக்கம், பயம், ஸந்தான வ்ருத்திக்குக் காரணமான இந்த்ரிய வ்யாபாரம் இவைகள் பசுக்க-

ருக்கும் மனிதனுக்கும் ஒன்றுதான். யுக்தாயுக்தஞானம், விவேக வைராக்யாதிகள் மட்டும், ஆத்ம குணங்களெனத் தகும். மிருக தர்மங்களெனத் தகுந்தவைகளெல்லாம், ப்ரக்ருதி (சரீர)தர்மங்கள். இவைகளைத்தான் ஸ்ரீ கிருஷ்ணபகவான் பகவத்கீதை 16வது அத்தியாயத்தில் ஆசுர ஸம்பத் குணங்களென்று நிரூபித்திருக்கிறார். ஆத்மகுணங்களென்று சொல்லத் தகுந்த குணங்கள் சிலவற்றைச் சொல்லி அவைகளை தைவ ஸம்பத் குணங்களென்று சொல்லியிருக்கிறார். சாமான்யமாக பிரதி மனுஷ்யனிடத்திலும் தைவ ஸம்பத் குணங்கள் கொஞ்சமும், அசுர ஸம்பத் குணங்கள் கொஞ்சமும் கலந்து இருக்கும்.

அபயம் ஸத்வஸம்சுத்திர் ஜ்ஞானயோகவ்யவஸ்திதி: ।
தானம் தமச்ச யஜ்ஞச்ச ஸ்வாத்யாயஸ்தப ஆர்ஜவம் ॥
அஹிம்ஸா ஸத்யமக்ரோதஸ்த்யாக: சாந்திரபைசுனம் ।
தயா பூதேஷ்வலோலுப்த்வம் மார்தவம் ஹ்ரீரசாபலம் ॥
தேஜ: க்ஷமா த்ருதி: சௌசமத்ரோஹோ நாதிமானிதா ।

(கீதை அ. 16, சு. 1, 2, 3.)

பயமில்லாமலிருத்தல், பரிசுத்த ஸ்வபாவம், ஞானயோகத்தில் ஆசக்தி, தானம், இந்த்ரிய நிக்ரஹம், தேவதா பூஜைகள், சாஸ்த்ர ஆராய்ச்சி, தபஸ், ந்யாய ப்ரவர்த்தனம், அஹிம்ஸை, ஸத்யம், குரோதமில்லாமை, த்யாகம், சாந்தி, பிறர்களிடத்தில் தோஷாரோபணம் செய்யாமலிருத்தல், பூத தயை, விஷய போகங்களிடத்தில் ஆசையின்றி யிருத்தல், ம்ருது பாவம், லஜ்ஜை, (ஆத்ம ஸ்துதி இல்லாமலிருப்பது) தேஜஸ், பொறுமை, தைர்யம், சௌசம், த்ரோஹமில்லாம லிருத்தல், அஹங்கார மில்லாதிருத்தல் இவைகள் தைவ ஸம்பந்தமான குணங்கள்.

(இன்னும் வரும்.)

## * உதயநக்ஷத்திர மகாசங்கம்.

இம்மகா சங்கத்தைப்பற்றிய ஒரு விசேட செய்தியாவது: சமீபகாலமான சென்ற ஜுலை மீ'த்தில் ஆமன் மகா க்ஷேத்திரத்

* இந்து அடையார் புல்லெட்டின் பத்திரிகையிலிருந்து பிரம்மஸ்ரீ P. R. ஸுந்தரராஜமய்யர் அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.



தில் நடைபெற்ற 3-வது சர்வதேச மகாநாட்டுக் கூட்டமாகும். இந்தப் பத்திரிகையை அச்சிடப்போகுந் தருணத்திற்றான் நமக்கு, Herald of the Star பத்திரிகையின் ஆகஸ்டு சஞ்சிகை கிட்டியது. அப்பத்திரிகையில் மேற்கூறிய மகாநாட்டின் விவரங்கள் முழுவதும் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. இம்மகாநாட்டின் சம்பவமோ, இனி யநேக காலங்கள் வரை யாவரும் சிந்தித்து அனுபவிக்கக் கூடியதாய் ஏற்பட்டிருக்கின்றது. ஆதலின் முக்கியமானதோர் விஷயத்தை உலகத்தவர்க்கு வெளிப்படுத்திக் கூற எத்தனிக்கும்பொழுது அதைப்பற்றிய செய்தியில் முழுவதையும் சொல்லாமல் சிற்சில பாகங்களை மட்டும் பற்றி இங்கு எழுதப்புகுதல் குறைவுள்ளதும் யாவருக்கும் மன வருத்தத்தைத் தருவதுமாகவே முடியும் எனக் கருதி, ஸ்ரீமதி வஸந்தம்மையாரவர்கள் தனக்குத் தோன்றியவற்றைப்பற்றி எழுதி முடித்திருக்கும் வியாஸத்தினின்றும் ஒரு சிறுபாகத்தையும், ஒன்றிரண்டு குறிப்புகளையுமே இங்கு பிரசுரிக்கத் துணிந்தோம்.

### டாக்டர் வஸந்தம்மையாரின் மனதில்பட்ட தோற்றம்.

எங்கும் விரிந்த சதுப்பு நிலத்தின் மேலெல்லாம் மலைப்புல் மூடிநின்றது. நெடிய மரங்கள் நிறைந்த காடுகளும் ஆங்காங்கு வானுற ஓங்கி வளம்பெற வளர்ந்து நின்றன; நிமிஷந்தோறும் மாறிக்கொண்டுவரும் மூட்டங்களுடன் மேகங்களும் சூரிய கிரணங்களும் கலந்து கலந்து விளங்கின; வெண்ணிறக் கூடாரங்கள் சில பலவாய் ஆங்காங்கு பெரும் கடிதத்தில் புள்ளிகள் போட்டதுபோல் தோன்றின; ஸ்திரீ புமான்கள், சிறுவர் சிறுமியர் இரட்டையிலும் பன்மையிலும் கூடிக்கூடி உலாவினர்; பல் தேயத்தவர்களும் வித விதமான உடைகளை அணிந்து விளங்கினர்; ஆயினும் இவ்வனந்தம் வேற்றுமைகள் மத்தியிலும் ஆனந்தம் எனும் ஓரே ஒரு குணந்தான் காணப்பட்டது; உண்மையில் இவர்களைக்காட்டிலும் அதிக ஆனந்தம் உடையவர்களான கூட்டங்களே இருக்கமாட்டாதென்பது திண்ணம். ஆயினும் அங்கு உரத்த சத்தமுடைய சிரிப்புகளும், சந்தோஷத்தால் ஆரவாரக் கொந்தளிப்புகளும் நிகழவில்லை; பின்னை, ஓரே தொடர்பான மனக்களிப்பும், மத்தியில் மத்தியில் அதுவே பொங்கி எழுந்து மிருதுவான உவகையாகும் அலைகளை அங்கு வந்திருந்த மனிதர்குழாம் எனும் சமுத்திரத்தில் பாவி வீசியது. இவ்வனைவருடைய சத்தங்களும் ஒன்று

சேர்ந்தபொழுது அங்குவந்து ஆடிப்பாடி நின்ற பறவைகளின் சங்கீதத் தொனிகளோடு கலந்து நிரம்பி பறவை இனங்களின் குரல்களை பூரணமாக்கின.

இவ்விதம் வந்து கூடினவர்களான சுமார் 2000 தொகையுள்ள ஜனங்கள் அனைவரும் மிக ஆனந்த அனுபவிகளாய் உத்ஸாகமும் குதூகலமும் யாரைக்கொண்டு அடைந்தார்கள் எனின், ஒரே ஒரு ஒல்லி தேகமுடைய இந்து தேசத்திய சிறுவனைக்கொண்டே என்க. அவர் மிக சாந்தமும் சந்தோஷம் நிரம்பிய பார்வையும் உடையவராய் நாற்புறத்திலும் அன்பு தன்னிடமிருந்து வழிந்து ஓடும்படி விளங்கினர். பிரதிதினமும் மாலையில் அவ்வாரணியத்தில் யாவரும் சூழ்ந்து நிற்கும்பொழுது மத்தியில் பெரும் தீமூட்டம் ஒன்றை உண்டுபண்ணுவதற்காக சேகரிக்கப்பட்டிருந்த கொம்பு கட்டைகளில் முதல் முதல் நெருப்பையிட்டு அக்னிபகவானுக்கு உரிய ஆவாஹன மந்திரத்தை மிகுந்த சக்திகொண்டு உச்சரித்தார். ஸம்ஸ்கிருத பாஷையிலுள்ள அம்மந்திரத் தொனிகள் இவரது உச்சாரணத்தினால் மிகுந்த கெம்பீரம் அடைந்து விளங்கின. அங்ஙனமே மூட்டப்பட்ட தீயும் மிக அழகுபொருந்திய ஜுவாலை மயமாய் கிளம்பி ஆகாசத்தில் உன்னி வெகு காந்தியுடன் பிரகாசிக்கவே, அதைப் பார்ப்போர்க்கு இச்சிறுவரது ஆற்றலான மந்த்ர உச்சாரணத்தால் அழைக்கப்பட்டு சகல அக்னி பூதங்களும் ஆகாசத்தில் நின்று ஜொலித்துக்கொண்டு அவர் அழைப்புக்கு இணங்கி தாங்கள் வந்திருக்கும் வரவின் சந்தோஷத்தை மிகுந்த ஆரவாரத்துடன் பாடிக்களித்து நின்றனபோற்றோன்றின. பின்னர் இவரும் சூழநின்ற எங்கட்கெல்லாம் ஆனந்தமய உலகம் யாது என விரித்து உரைப்பாராகி, அவ்வுலகின்கண் யாவரும் வருக, மானிடர்க்கெல்லாம் சொந்தமாகிய பதவியில் நித்தியமான ஆனந்த வாழ்வில் தன்னோடுங்கூட ஸ்திரமாய் யாவரும் வசிக்கலாம், என மொழிந்து அருளினர். இவ்விதம் சம்பாஷணை செய்து முடிந்தபின்னர் ஸ்ரீ கிருஷ்ணபகவானைப் புகழும் தோத்திரப்பாக்களை கானம் பண்ணினார். அப்படிப்பாடியபொழுது நம் சிறுவரான கிருஷ்ணஜி முன்காலத்தில் பிருந்தாவன பூமியில் நடமாடிய கடவுளைப்போல நம் ஹிருதயங்களை யெல்லாம் கொள்ளையே கொண்டனர்.



மாலைப்பொழுதில் தினந்தோறும் முடிவில் எப்படி ஸங்கீதம் நிகழ்ந்ததோ, அவ்விதமே காலை வேளைகளிலும் ஸ்தோத்திர கானம் முடிந்தபின் யாத்திரை வந்தவர் யாவரும் காலை போஜனத்திற்கென கூடுவதற்காக நிருமிக்கப்பட்ட பெரிய கூடாரமொன்றில் சத்தமில்லாமல் யாவரும் தியானம் செய்தனர். நம் கிருஷ்ணஜி சில சமயங்களில் வந்திருந்தவர்களுக்கு, நமக்கு நாற்புறத்திலும் விளங்கும் இயற்கையோடு கலந்த ஸ்வபாவமான வாழ்வைப் பற்றி எடுத்துரைத்தனர். அவ்வித ஆடம்பரமற்ற வாழ்வின் அழகையும் யதார்த்தமான இயற்கையொடு பொருந்தி அதற்கு மாறுபடாது நிற்கும் தன்மையையும் அவர் எடுத்துக் காட்டினார். அவ்விதம் வசிப்பதினாற்றான், நாம் எங்கும் நிறைந்து அநந்தமான சக்திகளின் ஊடே நின்று இயக்கம் செய்யும் ஏகமயமாம் பெருவாழ்வின் சுவையை உணருதலும், அதன் மோன ரஸப் பிரவாஹங்களின் வழியே மெள்ள மெள்ளக் கிளம்பி நிரதிசயமான சாந்தியும் ஆனந்தமும் நிறைந்து ஒளிரும் முடிவை அடைதலும் கூடும் என விளக்கிக்காட்டினர்.

மற்றொரு நாட்காலையில் கிருஷ்ணஜி “யுத்தமும் சமாதானமும்” எனும் விஷயத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்து, உலகினரது போராட்டம் அல்லது யுத்தத்துக்கு மூல காரணம் யாதென உண்மையான ஏதுக்களை மிகத் தெளிவாய்க் கண்டறிந்து உறுதியும், சந்தேகமுமற்ற மொழிகளால் அவற்றை விளக்கினர். இச்சம்பாஷணைகளுள் சில பாகங்களை அவர் பேசும்பொழுது விசேஷ ஒய்யாரமும் கௌரவமும் பொருந்தி விளங்கினார். இவை சில மாதங்களுக்குமுன் அவரிடத்தில் இருந்த குழந்தைப்பருவத்திற்கேற்ற சங்கோச குணத்திற்கு முற்றிலும் மாறுபாடாக இருந்தது. ஆயினும் இந்தத் தருணத்தில் அவரிடம் சிறுபிள்ளையின் முகவிலாஸமும் அழகிய பார்வையும் மட்டும் நீங்கவில்லை. ஆனால் பரம அன்பு கிருபை இவற்றுடன் எவற்றையும் ஆண்டு அடக்கி வரும் உயர்ந்த வஸ்து ஒன்று, அவரிடமிருந்து விளங்கி அவர் மூலமாய் மேற்படி வசனங்களை மொழிந்தது என்று சொல்லும்படி ஒரு மஹா வீரியம் பொருந்திய சக்திமட்டும் அவர் மாட்டுப் பிரகாசித்தது.

அவரிடமிருந்து எப்புறத்தும் கதிர்வீசி நின்ற அன்பு அங்குள்ள பால விருத்தரனைவரையும் அவரை அணுகி ஓடி வரும்

படி செய்து கொண்டேயிருந்தது; இவ்வன்பு நிரம்ப இருந்த பொழுதும், அதற்கேற்ற கெம்பீர நடையும் அசையாத சாந்தியும் குறையாமல் விளங்கின. இவ்வுயர் குணங்களை தானே திருஷ்டாந்தமாய்க் காட்டுபவராகி, பிறரெல்லோரையும் அவ்வழி நிற்கும்படி அவர் தூண்டினார். அவரைப் பார்க்கும் பொழுது, உடை ஆபரணாதி வஸ்துக்களைத் தரித்துக்கொள்ளாமல் ஆடம்பரமின்றி அனுபவிக்கப்படும் வாழ்வு மிக அழகுள்ளதென நாங்கள் யாவரும் உணர்ந்தோம். இச்சமயங்களில் எனது நினைவுகள் நமது உயர் மாதருபூமியாகிய இந்தியாவை நோக்கிச் சென்றன. அங்குதான் விசேஷ ஞானமும் அழகும் ஆடம்பரமற்ற இயற்கை வாழ்வும் ஒன்றைவிட்டு ஒன்று பிரியாது கலந்து விளங்குகின்றன. ஆதலின் இவ்வுண்மையான புத்தியர்ந்து, பலவித அனாவசியகமான வஸ்துக்களை நாடித்தேடி அலைந்து அழியும் மேற்றிசையாருக்குத் தெரியப்படல்நியாயமே: ஒரு மனிதனுக்கு அவனிடமுள்ள ஆபரணமாதி வஸ்துக்கள் அவனது வாழ்விற்கு இன்றியமையாதென ஆகாது எனும்ஞாபகம் அடிக்கடி பிறரால் ஊட்டப்படுவது அவசியமேயாகும்.

உலகத்தின் சந்தடி சச்சரவுகள் யாவும் நீங்கிய இவ் ஆமென் மஹா க்ஷேத்திரத்தில் ஸந்தோஷமும் சாந்தமும் கொண்டு கழிக்கப்பட்ட இந்த ஒருவார தினங்களின் ஞாபகம் அவ்வமயத்தில் பாக்கியவசத்தால் அங்குவந்து சேர்ந்த நண்பர் அனைவர்களின் நினைவுகளில் வெகுகாலம் பதிந்துகிடக்கும். வந்து கூடினவர் அனைவரும் சகோதர சகோதரிகள் போலவே ஒருவர்க்கொருவர் அன்பும் ஆதரவும் காட்டி ஸேவைபுரிந்தும், ஒருவரையொருவர் கண்டபொழுதெல்லாம் புன்சிரிப்புடன் வரவு கூறியும், ஓரே பெருங் குடும்பஸ்தர்கள் போலக் கலந்து வாழ்ந்தோம். இனி இவ் வின்பமான சேர்க்கைக்குப் பிற்பாடு எவ்வித சங்கடங்கள் ஏற்படினும், இவ் ஆமென் க்ஷேத்திரக் கூட்டம் மட்டும் நினைக்கும்பொழுதெல்லாம் மிக சந்தோஷ அனுபவத்தைத் தருவதாய் எவராலும் மறக்கப்படாமல் நிற்கும். இவ்விதம் இந்த சமயத்தில் இவ்வற்புத அனுபவத்தில் நமக்குண்டாகிய விசுவாசமும் சிரத்தையும் எப்பொழுதும் மாறுபடாமல் நிற்றலே வேண்டும். நமக்குள் ஒருவருக்கொருவர் உண்டாகியிருக்கும் அன்பு கொஞ்சமேனும் குறைவுபடாமலிருக்கல்வேண்டும். இவ் ஆமென் மஹா க்ஷேத்தி



210809

ரத்தின் சதுப்பு நிலங்களிலும் மரமடர்ந்த [illegible]களிலும் நாம் வசித்த இந்த சமயங்களில் நமக்குண்டான அன்பு, சாந்தி, [illegible] இவைகளையெல்லாம் பின்வரு நாட்களில் நாம் காணும் எவருடனும், நாம் போகும் ஸ்தலங்கள்தோறும் பரவி வரும்படி செய்வோமாக.

---

## அக்னிஜ்வாலை வெளிச்சத்தில் பேசிய பேச்சின் ஓர் பகுதி.

“ஸ்ரீ பரமாசாரியன் வரப்போகின்றாரென இனிப் பேசுவதற்கில்லை; ஏனெனில் அவர் இப்பொழுதே எழுந்தருளி நம்முடன் சஞ்சரித்து வருகிறாரென்று நமக்குத்தெரியும். அவர்தான் ஸ்தாபிக்க வந்திருக்கும் ஆனந்தமய பதவி அல்லது தர்மமாகிய மஹா ராஜ்யத்திற்கு அஸ்திவாரத்தை இக்கூட்டத்தில் ஏற்படுத்திவிட்டனர். இக்கூட்டத்தில் நிகழ்ந்தவைகளை இங்கு வராமலிருந்தவர்களுக்கு எழுத்து மூலமாய்த் தெரிவிப்பதைத் தவிர வேறுவழியில்லாமையைக்கண்டு துக்கிக்கிறோம்,... ஆஹா! அவ்விஷயங்கள் இந்த அழகும் அற்புதமும் நிறைந்த தலத்தினின்று வெகு தூரத்துக்கப்பால் வெறும் அச்செழுத்தில் படிக்கப்படும்பொழுது, அவற்றின் சக்திகளை விசேஷமாய் இழந்தவைகளாகின்றன. அவற்றைப் படிப்பவர்கள் அங்கே நேரில் கேட்டு அனுபவித்தவர்களுக் கேற்பட்ட என்றும் மறக்கொணாத மஹிமையையுடைய அனுபவங்களை தாங்களே மனதினால் ஊகித்துப் பூர்த்தி செய்துகொள்வார்களாக.”

---

“சாசுவதிகமான சாந்தியே என் திருஷ்டியில் விளங்குகின்றது. சகல வஸ்துக்களுக்கும் மென்மேலும் மஹிமையே உண்டாகும்; எப்பொழுதும் அவன் என்முன் நிற்கின்றான்.”

J. கிருஷ்ணமூர்த்தி.

## ஓம்மன் தாரக மகாநாட்டு ஞாபகச் சின்னங்கள்.

### கிருஷ்ணஜி சிரசின் மேல் பெரும் தாரகஜோதி.

அமெரிக்கா தேச நியூயார்க் (World) பத்திரிகை கூறுவது:—

ஓம்மன் தாரக மகாநாட்டு முகாமிலிருந்து பிரயாணிகள் திரும்பிவந்தவர்கள் ஒரு பெரும் ஆன்ம சக்தி கிருஷ்ணஜியினிடத்து பிரவேசமாகி நிகழ்ந்த விருத்தாந்தங்களைக் கூறுகிறார்கள்.

வரும் இப்பிரபஞ்சம் முழுவதும் அவனே. இத்தகைய மகிமை யுடையது அவனது பெருமை. இம்மட்டன்று; இதனினும் (மேற் கூறிய பிரபஞ்சமாதி வியக்திகளைக் காட்டிலும்;) உண்மையில் புருஷன் மிகப் பெரியவனே. சிருஷ்டியுள்ளடங்கின பதார்த்தங்க ளாகிய இவை அனந்தமும் அவனியற்கையில் நாலில் ஒருபங்கே யாகும்; இவையாவும் அழிவுடையவைகளே யாதலால் அவனியற் கையில் எஞ்சிநிற்கும் மற்றைய மூன்று பாகங்களும், அதீதமான அழிவற்ற நிலைமையிற்றான் விளங்குகின்றன.

𑌏𑌕𑍋 𑌦𑍇𑌵𑌃 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌗𑍂𑌢𑌃
𑌸𑌰𑍍𑌵𑌵𑍍𑌯𑌾𑌪𑍀 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌮𑌾 ॥
𑌕𑌰𑍍𑌮𑌾𑌧𑍍𑌯𑌕𑍍𑌷𑌃 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌧𑌿𑌵𑌾𑌸𑌃 𑌸𑌾𑌕𑍍𑌷𑍀 𑌚𑍇𑌤𑌾
𑌕𑍇𑌵𑌲𑍋 𑌨𑌿𑌰𑍍𑌗𑍁𑌣𑌶𑍍𑌚 ॥

ஸகல பூதங்களிலும் மறைந்து நிற்பவனும், ஸர்வ வியாபி யும், எல்லா உயிரினுக்கும் உயிராகியும் விளங்கும் கடவுள் ஒரு வனே. அவனே சகல கர்ம நியதிக்கும் அதிகாரியும் ஸகல பூதங் களின் உள்ளுறையிலும் தங்குபவனும், யாவற்றையும் கண்கோ ளும் சாக்ஷியும் குணமாதிகளைக் கடந்து நிற்கும் அறிவுமாய், பிரகா சிக்கிறான்.

𑌏𑌕𑍋 𑌵𑌶𑍀 𑌨𑌿𑌷𑍍𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌾𑌂 𑌬𑌹𑍂𑌨𑌾𑌮𑍇𑌕𑌂 𑌬𑍀
𑌜𑌂 𑌬𑌹𑍁𑌧𑌾 𑌯𑌃 𑌕𑌰𑍋𑌤𑌿 । 𑌤𑌮𑌾𑌤𑍍𑌮𑌸𑍍𑌥𑌂 𑌯𑍇𑌨𑍁𑌪
𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌧𑍀𑌰𑌾𑌃 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌸𑍁𑌖𑌂 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌂 𑌨𑍇𑌤
𑌰𑍇𑌷𑌾𑌮𑍍 ॥

க்ரியையற்ற அனேகருக்குள் இவனொருவனே எல்லாக்ரியைக ளும்செய்ய வல்லமையுள்ளவன். ஒரேஒரு வித்தையை பல விளைவு களாகச் செய்கின்றவனாகிய இவன் தம்முள்ளேயே நிற்பதைக் கண் ணுறும் பெரியோர்களான தீரர்களுக்கே யென்னுமழியா இன்பம் கிட்டும். மற்றவர்க்கில்லை.

𑍐 𑌤𑌚𑍍𑌛𑌂 𑌯𑍋𑌰𑌾 𑌵𑍃𑌣𑍀𑌮𑌹𑍇 𑌗𑌾𑌤𑍁𑌂 𑌯𑌜𑍍𑌞𑌾𑌯
𑌗𑌾𑌤𑍁𑌂 𑌯𑌜𑍍𑌞𑌪𑌤𑌯𑍇 । 𑌦𑍈𑌵𑍀 𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿𑌰𑌸𑍍𑌤𑍁 𑌨𑌃
𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿𑌰𑍍𑌮𑌾𑌨𑍁𑌷𑍇𑌭𑍍𑌯𑌃 𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌂 𑌜𑌿𑌗𑌾𑌤𑍁 𑌭𑍇𑌷
𑌜𑌮𑍍 𑌶𑌂 𑌨𑍋 𑌅𑌸𑍍𑌤𑍁 𑌦𑍍𑌵𑌿𑌪𑌦𑍇 𑌶𑌂 𑌚𑌤𑍁𑌷𑍍𑌪𑌦𑍇 ॥
𑍐 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌃 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌃 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌃 ॥



ஸர்வ எக்ஞங்களையும், எக்ஞங்களின் பதியாகிய கடவுளையும், குறித்து, நாங்கள் கானம் பண்ணுமாறு மேலேகூறிய பாக்கியத் தைக் கோருகிறோம். தெய்வீகமாகிய அந்த பாக்யம் எங்களுக்கு வாய்க்கட்டும். எல்லா மனிதர்களும் வாழ்க. நற்பயனைத்தரும் அந்த க்ஷேமமானது மேலோங்கி ஒலிக்கட்டும். இரு காலுடையவர்க்கெல் லாம் சுகம் உண்டாகுக. அப்படியே நாற்காலுடையவைகளுக்கும் சுகம் வருக. ஓம், சாந்தி! சாந்தி! சாந்தி!

𑍐 𑌭𑌦𑍍𑌰𑌂 𑌕𑌰𑍍𑌣𑍇𑌭𑌿𑌃 𑌶𑍃𑌣𑍁𑌯𑌾𑌮 𑌦𑍇𑌵𑌾𑌃, 𑌭𑌦𑍍𑌰𑌂
𑌪𑌶𑍍𑌯𑍇𑌮𑌾𑌕𑍍𑌷𑌭𑌿𑌰𑍍𑌯𑌜𑌤𑍍𑌰𑌾𑌃 । 𑌸𑍍𑌥𑌿𑌰𑍈𑌰𑌙𑍍𑌗𑍈𑌸𑍍𑌤𑍁
𑌷𑍍𑌟𑍁𑌵𑌾𑌗𑍍𑌂𑌸𑌸𑍍𑌤𑌨𑍂𑌭𑌿𑌃 𑌵𑍍𑌯𑌶𑍇𑌮 𑌦𑍇𑌵𑌹𑌿𑌤𑌂 𑌯𑌦𑌾
𑌯𑍁𑌃 ॥
𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿 𑌨 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑍋 𑌵𑍃𑌦𑍍𑌧𑌶𑍍𑌰𑌵𑌾𑌃 𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿 𑌨𑌃 𑌪𑍂𑌷𑌾
𑌵𑌿𑌶𑍍𑌵𑌵𑍇𑌦𑌾𑌃 । 𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿 𑌨𑌸𑍍𑌤𑌾𑌰𑍍𑌕𑍍𑌷𑍍𑌯𑍋 𑌅𑌰𑌿𑌷𑍍𑌟𑌨𑍇𑌮𑌿𑌃
𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿 𑌨𑍋 𑌬𑍃𑌹𑌸𑍍𑌪𑌤𑌿𑌰𑍍𑌦𑌧𑌾𑌤𑍁 ॥
𑍐 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌃 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌃 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌃

ஓ தேவர்களே! யாங்கள் காதுகளால் சுபத்தையே கேட்டல் வேண்டும். ஸகல பூஜகர்களையும் ரக்ஷிப்பவர்களே! எங்கள் கண் களால், யாங்கள் சுபத்தையே காணல்வேண்டும். சலனமற்ற அங் கங்களுடைய எங்கள் சரீரங்களால் நாங்கள் (கடவுளை) தொழுது வரல் வேண்டும். (அவ்விதமே) தேவர்களுக்கு அனுகூலமாக எங்கள் வாழ்நாளைக் கழித்தல்வேண்டும். நீடிய புகழையுடைய இந் திரன் எங்களுக்கு ஆசீர்வாதம் அளித்தல்வேண்டும். ஸகலத்தை யும் போஷிப்பவனும் எல்லாம் அறிந்தவனுமான சூரியன் (ஸவிதா) எங்களை ஆசீர்வதித்தருளல் வேண்டும். நன்மையை வருவிக்கும் சக்ரமாக விளங்கும் கருடனும் நமக்கு அருள்புரியட்டும் பிரஹஸ் பதியும் நமக்கு நன்மைபுரியட்டும். ஓம், சாந்தி! சாந்தி! சாந்தி!

---

## குறிப்புகளும் ஸமாசாரங்களும்.

—(::)—

நவம்பர் மீ 17உ யானது பிரம்மவித்யா மஹாஸபையைச் சேர்ந்தவர்களுக்கு ஓர் விசேஷ புண்யதினமாகும். 1875 ௵ நவம்பர் மீ 17உ இம்மஹாஸபையானது முதன்முதல் இவ்வுலகில் ஸ்தாபிக்கப்பட்டது. அது இப்பொழுது, 45 தேசங்களில் பரவி

சுமார் 1600 கிளைச்சபைகளையும், சுமார் 43000 மெம்பர்களையுமுடையதாய் வியாபித்திருக்கின்றது. உலகமெங்குமுள்ள புது கிளைச்சபைகளுள்ள இடங்களிலெல்லாம் இப்புண்ய தினத்தை விசேஷ உற்சாகத்துடன் கொண்டாடுவார்கள்.

* * * *

இவ்வருஷம் பிரம்மவித்யா மஹாஸபையின் வருஷோத்ஸவம் (Convention) ஸ்ரீ காசி க்ஷேத்திரத்தில் டிஸம்பர் மீ 23 உ முதல் நடைபெறும். அக்கூட்டத்திற்குச் செல்லும் மெம்பர்களும் மற்ற அபிமானிகளும், வருகிற டிஸம்பர் மீ முதல் தேதிக்குள், அஸிஸ்டெண்டு ஜெனரல் ஸெக்ரேடேரி தியஸாபிகல் ஸொஸைடி காசி. என்ற விலாசத்திற்கு முன்னடியே எழுதுவதுடன், அத்தேதிக்குள் மெம்பர்களுக்கு ரூபா 2, மெம்பர் அல்லாதவர்களுக்கு ரூபா 3 கட்டணம் (Delegate's fee) அனுப்பவேண்டும். 16 வயதுக் குட்பட்டவர்களுக்கு ஷை கட்டணம் கிடையாது, இந்தத் தேதிக்குள் தங்கள் பெயர்களை பதிவு செய்து கொள்ளாதவர்களுக்கு இடம் கிடைப்பது நிச்சயமாகச் சொல்ல முடியாது. பிரத்யேகமான இடம் வேண்டுபவர் 1 அறைக்கு ரூ 5ம் இரட்டை அறைகளுக்கு ரூ 10 வீதமும் மேற்சொன்ன தேதிக்குள் செலுத்தவேண்டும். இரும்பு கட்டில்களுக்கு ரூ 3 வீதம் கட்டவேண்டும். மற்றப்படி படுக்கை, கொசுவலை, விளக்கு, பான பாத்திரம் முதலியவைகளை அவரவர்கள் கொண்டுபோக வேண்டும். ஹிந்துக்களுக்கு 1 சாப்பாட்டுக்கு 8 அணா வீதமும், ஐரோப்பியர்களுக்கு ரூபா 1 வீதமும் சார்ஜு செய்யப்படும். இந்தக்கூட்டத்திற்கு வருகிறவர்கள் வேறு ஏதேனும் சமாச்சாரம் அறிய விரும்பினால், அவர்கள், மிஸ்டர் இராமச்சந்திர சுக்லர், தியஸாபிகல் ஸொஸைடி, காசி என்ற விலாஸத்திற்கு இங்கிலீஷில் எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

* * * *

மேலேகூறிய கன்வென்ஷன் மஹாஸபைக்கு ஆஸ்ட்ரேலியாவிலிருந்து ஸ்ரீமான் C. W. லெட்பீட்டர் என்னும் பெரியார், டாக்டர் அன்னிபெஸண்டு அம்மையாரவர்களின் விருப்பத்திற்கிணங்கி வரப்போவதாக ஓர் சந்தோஷ சமாச்சாரம் எட்டியிருக்கிறது. நமது இந்திய மெம்பர்களின் பெயரால் ஸ்ரீமான் ஸி. ஜினராஜதாஸர் அவர்கள், ஸ்ரீமான் லெட்பீட்டர் அவர்களின் பிரயா



ணச் செலவுகளுக்கு உதவி பண்ணுவதாக வாக்களித்திருக்கின்றார். அதற்கு உதவிபுரிய விரும்பும் மெம்பர்கள் தங்கள் தங்கள் நன்கொடைகளை எவ்வளவு சிறு தொகையானாலும் தமக்கு அனுப்பும்படி எல்லா மெம்பர்களையும் ஸ்ரீமான் ஜினராஜதாஸர் அவர்கள் கேட்டுக்கொள்கிறார். ஆகையால் இப்பெருங் காரியத்திற்குப் பொருளுதவி புரிய முன்வரும் பாக்கியசாலிகளான ஸகல அபிமானிகளும் ஸ்ரீமான் ஸி. ஜினராஜதாஸர் தியஸாபிகல் ஸொஸைடி அடையார் என்ற விலாஸத்திற்கு அனுப்புவார்களென்று நம்புகிறோம்.

சென்ற அக்டோபர் மீ 23, 24 உகளில் தஞ்சை ஜில்லாவின் பிரம்மஞான கான்பரென்ஸ் கும்பகோணத்தில் விசேஷ உத்ஸாகத்துடனும் சிறப்புடனும் நடைபெற்றது. ஸ்ரீமான் ஸி. ஜினராஜதாஸர் அவர்கள் அக்ராஸனம் வகிப்பதாய் குறிப்பிடப்பட்டிருந்தபடி வரமுடியாமல், அடையாற்றிலிருந்து காரனன் சீமாட்டி சபாநாயகியாக அனுப்பப்பட்டார். சுமார் 70 மெம்பர்கள் வெளியூர்களிலிருந்து வந்திருந்தனர். இரண்டு நாட்களிலும் காலையில் 6½-மணிக்கு பாரதஸமாஜ பூஜை நடத்தப்பட்டது. அக்ராஸனாதிபதியவர்களின் ஆங்கில உபந்யாஸங்கள் 2-ம், பிரம்மஞானம் சென்ற 50 வருஷங்களில் செய்த வேலையைப்பற்றியும் ஸ்ரீ ஜகத்குருவின் வருகையைப்பற்றியும் புரியப்பட்டன. அப்பிரசங்கங்கள் கேட்போர்மனம் பரவசமாகும்படி வெகு உருக்கமாயிருந்தன. ஞானத்திற் சிறந்தவராயும் ஆங்கில பாஷையை வெகு அழகுடன் பேசவல்லவரும் மஹா அனுபவியுமான ஸ்ரீமான் ஜினராஜதாஸர் அவர்களின் வாக்கைக்கேட்டு ஆனந்திப்பதற்கில்லையேயென்று நினைத்தவர்களுங்கூட ஒருவாறு இவ்வம்மையின் பிரசங்கங்களைக்கேட்டு அகமகிழ்ந்தனர். இரண்டு சிறந்த தமிழ் உபந்யாசங்கள், ஸ்ரீமான் S. இராஜாசர்மய்யர் அவர்களாலும் ஸ்ரீமான் C. இராமய்யா அவர்களாலும் செய்யப்பட்டன. பிரம்மஞான ஸபை மெம்பர்களுக்கும் உதயதிசை நக்ஷத்ர சங்க மெம்பர்களுக்கும் பள்ளிக்கூட மாணவர்களுக்கும் உபந்யாசங்கள் நடைபெற்றன. 7 புதிய மெம்பர்கள் பிரம்மஞான ஸபையில் சேர்ந்தார்கள். கும்பகோணம் லாட்ஜின் அங்கத்தினர்களும் ஷை க்ரூப் ஸெக்ரெடெரி ஸ்ரீமான் S. நடேசய்யர் அவர்களும் வந்தவர்களுக்கு சௌ

காரியமாதிகளை செய்வதற்காக உழைத்த உழைப்பு மிகவும் புகழத்தக்கது.

* * * *

தென்தமிழ் ஜில்லாக்களின் பிரம்மஞானக் கூட்டம் (Federation) நாளது நவம்பர் மீ 20, 21 உ களில் இராமனாதபுரம் ஜில்லா சிவகெங்கையில் நடைபெறும், அச்சமயம் பிரம்மவித்யா மஹாஸபையின் உப அக்ராஸனாதிபதியான ஸ்ரீமான் C. ஜினராஜதாஸர் M. A. அவர்கள் அக்ராஸனம் வகிப்பார்கள். பென்ஷன் ஸப்ஜட்ஜும் பிரம்மஞானஸபை இந்தியன் ஸெக்ஷன் ஜாயிண்டு ஜெனரல் ஸெக்ரெடேரியுமான பிரம்மஸ்ரீ T. இராமச்சந்திரராவ் அவர்களும் Sir. T. ஸதாசிவய்யர் அவர்களும் அவ்விடம் விஜயம் செய்வார்கள். வெளி யிடங்களிலிருந்து பல மெம்பர்களும் அபிமானிகளும் அவசியம் அக்கூட்டத்திற்குச் சென்று ஆனந்தத்தை அனுபவிப்பார்களென்று நம்புகிறோம்.

---

## திருநெல்வேலி பிரமஞ்ஞானக் கிளைச்சங்கங்களின் 7-வது மகாநாடு.

திருநெல்வேலி பிரமஞ்ஞானக் கிளைச்சங்கங்களின் 7-வது மகாநாடு சென்ற அக்டோபர் மாதம் 23, 24 தேதிகளில் திருவனந்தபுரம் மஹாராஜாக் காலேஜ் கணித நூல் போதகாசிரியர் கனம் R. ஸ்ரீனிவாசய்யர் அவர்கள் M. A. M. R. A. S., F. T. S. தலைமையின் கீழ் திருநெல்வேலி பிரமஞ்ஞானக் கிளைச்சங்கத்தின் இருப்பிடமாகிய சிந்து பூந்துறை தக்ஷிணாமூர்த்தி ஆச்சிரமத்தில் நடைபெற்றது. இந்த மகாநாட்டுக்குத் திருநெல்வேலி ஜில்லாக் கிளைச் சங்கங்களாகிய கடம்பூர், ஸ்ரீ வைகுண்டம், தூத்துக்குடி, அம்பாசமுத்திரம் இடங்களிலிருந்தும், மதுரை, நாங்குனேரி, திருவனந்தபுரம் முதலிய பிற இடங்களிலிருந்தும் பிரமஞ்ஞான சங்க அங்கத்தினர்களும் அபிமானிகள் சிலரும் வந்திருந்தார்கள்.

2. 23-ந்தேதி சனிக்கிழமை காலை 9-30 மணிக்குத் திருநெல்வேலி பிரமஞ்ஞானக் கிளைச்சங்கக் காரியதரிசி மா. வே. நெல்லையப்ப பிள்ளையவர்கள் B. A., F. T. S. தலைவர் கனம் R. ஸ்ரீனிவாசய்யர் அவர்கள் M. A. M. R. A. S., F. T. S. அவர்களையும் அயலூர்களிலிருந்து வந்த பிரதி நிதிகளையும் உபசாரம் உரைசெய்தார்கள். பின் அவர்கள் தலைவர் அவர்களை, இந்த மகா நாட்டுக்குத் தலைமை வகித்துச் செவ்வனே இரண்டு நாட்களும் நிகழ்ச்சிகளை நடத்தித்தரும்படியாகக் கேட்டுக் கொண்டார்கள்.

3. தலைவர் அவர்கள் "இறைவனது பழ அடியார்கள்" என்னும் பொருள் பற்றி ஓர் அருமையான சொற்பொழிவு, கேட்டாரைப்பிணிக்கும் தகையவாய்ச் செய்தார்கள்.



4. பின் கனம் M. நாராயணஸ்வாமி அய்யரவர்கள் B.A., B.L., F. T. S. ஹைக்கோர்ட்டு வக்கீல், மதுரை, "அத்தியாசம்" (Superstition) என்னும் பொருள் பற்றி ஒரு சொற்பொழிவு செய்தார்கள்.

5. பின் ஜில்லா பிரமஞ்ஞானக் கிளைச்சங்கங்களின் காரியதரிசி கனம் R. பஞ்சாபகேச அய்யர் அவர்கள் குறுப்பின் வருஷாந்தர அறிக்கைப்பத்திரம் படித்தார்கள்.

6. மதுரை ஹைக்கோர்ட்டு வக்கீல் கனம் A. ரெங்கசுவாமி ஐயர் அவர்கள் B, A., B. L., F. T. S. "பிரமஞ்ஞானமும் தேவாலயமும்" என்னும் பொருள் பற்றி ஓர் அருமையான சொற்பொழிவு செய்தார்கள். நமது தேவாலயங்கள் கடவுளினது அருளைப் பெறுதற்கு வாயில்களாக இருக்கின்றன என்னும் உண்மையைப் பற்றி யாவரும் தெளிவாய் அறியும்படி சொன்னார்கள்.

7. 23-ந்தேதி சனிக்கிழமை 8-30 மணிக்கு சிந்து பூந்துறை தக்ஷிணாமூர்த்தி ஆசிரமத்திற்கு முன் திருவாளர் தெய்வநாயகம் செட்டியார் அவர்களுடைய காலி மனையில் விறகினால் அக்கினிவளர்த்து அந்த அக்கினியைச்சுற்றி உதய நக்ஷத்திர சங்க அங்கத்தினர்கள் உட்கார்ந்துகொண்டு நடத்தும்படியான சடங்கு செய்யப்பட்டது. இதற்கு "உதய நக்ஷத்திர சங்கத்தினர் உறைவிடம் அக்கினிச்சடங்கு" (Camp Fire) அல்லது சுருக்கமாக உறைவிடம் அக்னிச்சடங்கு என்று பெயர். இந்தச்சடங்கு 1926-ம் ஆண்டு ஜூலைமாதத்தில் ஓம்மன் நகரில் நடந்த உதய நக்ஷத்திர அகிலமகா நாட்டில் இரண்டாயிரம் உறுப்பினர்கள் கூடிய கூட்டத்தாரால் செய்யப்பட்டது. அதே சடங்கு திருநெல்வேலியில் மிகச் சுருங்கிய முறையில் செய்யப்பட்டது.

8. இந்த அக்கினிச் சடங்கின் காலத்தில் சுவாலித்து எரிகின்ற அக்கினியைச் சுற்றி உதய நக்ஷத்திர சங்க உறுப்பினர்கள் பிரமஞ்ஞான சங்க உறுப்பினர்கள், சாரணர் (Scouts) எல்லாரும் உட்கார்ந்துகொண்டு தலைவர் கனம் R. ஸ்ரீனிவாசய்யர் அவர்கள் ஆணையின்படி ஒவ்வொருவரும் மூன்று நிமிஷம் ஒவ்வொன்றைச் செய்தார்கள். சிலர் அக்னிக் கடவுளை தோத்திரம் செய்தார்கள். சிலர் கடவுளை தோத்திரம் செய்தார்கள். சிலர் விநோதமான சிறு கதை சொன்னார்கள்; சிலர் ஜெகத்குரு வருகையைப் பற்றிச் சொன்னார்கள்; சிலர் நகைச் சுவை கூடிய சொற்பொழிவு செய்தார்கள்; சிலர் தேவாரம் தாயுமான ஸ்வாமிகள் பாடல் பாடினார்கள். இவ்வாறு சுமார் ஒன்றரைமணி நேரம் இச்சடங்கு நிகழ்ந்தது. ஜனங்கள் கூட்டமாய்ச் சுற்றி உட்கார்ந்துகொண்டும் நின்றுகொண்டும் நடந்ததையெல்லாம் பார்த்துக்கொண்டும் கேட்டுக்கொண்டும் ஆனந்தம் அடைந்தார்

கள். கடைசியில் தலைவர் அவர்கள் 15 அல்லது 20 நிமிடம் முடிவுரை செய்தார்கள். இத்துடன் இச்சடங்கு முடிந்து இன்றையத் தினம் நிகழ்ச்சிகளும் முடிந்தன.

9. 24ஆ ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9–45 மணிக்குத் திருநெல்வேலி கவர்ண்மெண்டு டிரெயினிங் ஸ்கூலில் (Government Training School) தலைவர் அவர்கள் "நாலாவது அளவு" (Fourth Dimension) என்னும் பொருள் பற்றி சுமார் ஒன்றரை மணி நேரம் ஒரு அருமையான சொற்பொழிவு செய்தார்கள். சொற்பொழிவு மண்டபம் நிறைய மக்கள் கூடியிருந்தார்கள். தலைவர் சொற்பொழிவு முடிந்தவுடன் ஜில்லா டிப்டி கலெக்டர் கனம் கிருஷ்ணமூர்த்தி அய்யர் அவர்கள் B. A., எழுந்து "நான் இதுவரையும் இந்தமாதிரியான பிரசங்கம் கேட்டதில்லை. பிரசங்கம் ஆரம்பமுதல் முடிவு வரையிலும் நான் என் வசமல்லாமல் அதன் வசமாய் ஈடுபட்டிருந்தேன். நான் பல புஸ்தகங்களைப் படித்துத் தெளிவுப் பெறாத உண்மைகளை நான் இந்தப் பிரசங்கத்தினால் அறிந்துகொண்டேன்" என்று சொன்னார்கள்.

10. 24-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகலில் உதய நக்ஷத்திர சங்கக்கூட்டம் ஒன்று நடந்தது. அப்பொழுது தலைவர் அவர்கள் சொற்பொழிவு செய்தார்கள். பின் மா. வே. நெல்லையப்ப பிள்ளையவர்கள் B. A., F. T. S. தற்கால இந்தியாவுக்கு பிரமஞ்ஞான சங்கத்தின் ஆவசியகத்தைப்பற்றி ஒரு மணி நேரம் சொற்பொழிவு செய்தார்கள். பின் அபிமானிகனம் இலக்குமணப் போற்றி அய்யா அவர்களும் பிரமஞ்ஞான சங்கத்தைப்பற்றிய தங்கள் அநுபவத்தைச் சொற்பொழிவு செய்தார்கள். பின் பெடரேஷன் (Federation Secretary) காரியதரிசி K. S. ராமச்சந்திர அய்யர் அவர்கள் பிரமஞ்ஞான சங்கத்தைப்பற்றிய தங்கள் அநுபவத்தைச் சொற்பொழிவு செய்தார்கள்.

11. பின் தலைவர் அவர்கள் பிரமஞ்ஞான சங்கத்துக்கு ஆதாரமாயிருக்கிற பெரியோர்களைப்பற்றியும் ஜெகத்குரு வருகையைப்பற்றியும் சொற்பொழிவு செய்தார்கள். முடிவில் காரியதரிசி மா. வே. நெல்லையப்ப பிள்ளையவர்கள் தலைவர் அவர்களுக்கு வந்தனோபசார வார்த்தை சொன்னார்கள்.

ஸ்ரீ வைகுண்டம் கனம் ஸ்ரீனிவாசய்யர் அவர்கள் தலைவர் அவர்களுக்கு வாழ்த்து உரையுடன் பூமாலை சூட்டினார்கள்.

கூட்டம் கலைந்தது.

25—10—1925.

M. V. NELLAIAPPA PILLAI
காரியதரிசி
பிரம்மஞானக் கிளைச்சங்கம், திருநெல்வேலி.

ஓம்.

அப்பர் வருகின்றாரென் றறையப்பா முரசு.
அம்பலத் தேகண்டோமென் றறையப்பா முரசு.

# புதுயுகம்.

(ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.)

வருஷ சந்தா தபாற்கூலியுட்பட ரூ 1—8—0.

ஸ்ரீலஸ்ரீ சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் "ஐயன்வருதருணமிது ஐயமிலைகண்டீர்!" என்று தென்னாட்டில் முரசறைந்ததும் அதைநாம் கேளாததால் உருமறைந்தார். அவர் சிஷ்யர் தொழுவூர் வேலாயுத முதலியார். தன்னிடம் பின்வருமாறு கூறியதாக 1882வருஷத்தில் வெளியிட்டிருக்கிறார்:—

"இச்சமரஸவேத ஸந்மார்க்க ஸங்கத்தில் நீங்கள் சேர அருகரல்லர். இதன் உண்மையான அங்கத்தினர்கள் இந்தியாவுக்கும் வடக்கே வெகுதூரத்தில் வசித்து வருகிறார்கள். நான் சொல்வதைக் கேட்கிறீர்களில்லை. * * ருஷியா, அமெரிக்காவிலிருந்தும் அந்நிய நாடுகளிலிருந்தும் ஜனங்கள்வந்து இதேஸர்வஜீவ சோதரத்துவத்தை வற்புறுத்திச் சொல்லுங்காலம் சமீபித்துவிட்டது. * வைகளெயுள்ள அச்சோதரர்கள் சீக்கிரம் இந்தியாவில் அநேக அற்புதங்களைச் செய்வதைக் காண்பீர்கள். அவற்றால் நம் நாட்டிற்கு எண்ணிறந்த நன்மைகளுண்டாகும். இவ்விதம் இப்போது நிகழ்வதை இப்பத்திரிகை மூலமாக அறியலாம். மற்ற அருமையான விஷயங்களும் உண்டு.

கிடைக்குமிடம்:—பத்திராதிபர், ஸ்ரீமான் இராவ்சாகிப்,
க. வி. கணக்கசபைபிள்ளை, அஸிஸ்டெண்ட் இஞ்சினியர் P. W. D.
"மோரியாசிரமம்" மேட்டூர் பவானி மார்க்கம்,
கோயமுத்தூர் ஜில்லா.

---

# கம்மபாலன்.

ஓர் சிறந்த மாதாந்தப்பத்திரிகை.

கோவில்பட்டி தென்இந்திய கம்மாளர் ஜன ஸபை ஆதிபத்தியத்தின் கீழ் நடைபெறுகின்றது. ஆசிரியர். ஸ்ரீமான். R. வெங்கிடஸாமி நாயுடு அவர்கள் வருஷ சந்தா ரூ. 1—8—0 தம்மவர் அபிவிர்த்தியில் நாட்டமுடைய அபிமானிகளனைவரும் இதை வாங்கி ஆதரிக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

பத்திரிகை கிடைக்குமிடம்:
கம்மபாலன் ஆபீஸ் மானேஜர்,
திருத்தங்கல் சாத்தூர் வழி.

# "தியஸாபிகல் ஸொஸைட்டி"

என்னும்

# பிரம்மஞான ஸபை.

இஃது 1875-ஞ் நவம்பர்-மீ 17உ அமெரிக்காவிலுள்ள நியூயார்க் நகரில் ஏற்பட்டு, சென்னை அடையாற்றில் இப்போது நிலை பெற்றிருக்கிறது. ஸமரஸ புத்தியோடு தத்துவ ஆராய்ச்சிக்கு ஒன்று சேருகிறவர்களின் சங்கம் இது. ஆதலால் இச்சங்கத்தார் நாஸ்திகத்தைக் கண்டித்து, ஆஸ்திக புத்தியை வளர்த்து, மனித வர்க்கத்திற்கு ஞானவழியில் உபகரிப்பவராவர். இதன் முக்கிய கொள்கைகள் மூன்று:—

(1) ஜாதி, மதம், வர்ணம், வகுப்பு, ஆண், பெண் இப் பேதங்களின்றி, ஸர்வஜன ஸகோதர பாவம் நிலைபெறச் சாதகமாயிருத்தல்.

(2) வெவ்வேறான மதம், தத்துவ சாஸ்திரம், பௌதிக சாஸ்திரங்களை ஒப்பிட்டு ஆராய்ச்சி செய்வதை ஆதரித்தல்.

(3) மனிதனிடத் தடங்கியுள்ள சக்திகளையும் நமக்கு விவரந் தெரியவாராத பிரபஞ்ச நியதிகளையும் பரிசோதனை செய்வது.

இச்சபையில் சேருகிறவர்கள் எம்மதத்தினராகவும் அல்லது ஒரு மதத்தையும் சேராதவராகவும் இருக்கலாம். ஆனால் மேற்கண்ட நோக்கங்களை ஒப்புக்கொள்ள வேண்டும். மதத் துவேஷங்களை ஒழித்து நல்லெண்ணமுள்ளவர்களாயிருந்து [illegible], தங்கள் மத அபிப்பிராயங்கள் எப்படியிருப்பினும் மதவுண்மைகளைப் படித்து மற்றவர்களோடு தங்கள் படிப்பைக் கலந்து கொள்ள விரும்பும் படிப்பாளிகள் இச்சங்கத்தில் ஒருங்கு சேருகிறார்கள். அவர்கள் ஒற்றுமைக்கு ஒரே பொது நம்பிக்கை காரணமன்று. தத்துவத்தைக் கண்டறியும் [illegible] லக்ஷியத்தோடு அவர்கள் ஒருங்கே முயற்சிப்பதுதான் காரண[illegible]

ஓம் தத் ஸத்.